GOKULAM

ஜூன் 2009 ✧ விலை ரூ.8/- ✧ 80 பக்கங்கள்

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

✸ கலர் கலராய் பூப்பது ஏன்?

வினாடி வினா போட்டி



கையெழுத்து களேபரம்!

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்



1051



1052



1053



1054



1055



1056



1057




1058



1059



1060



1061



1062



1063



1064



1065



1066



1067



1068



1069



1070



1071



1072



1073



1074



1075

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கோகுலம்

ஜூன் 2009 மலர் : 27 இதழ் : 5

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும் – பாரதியார்

டியர் குட்டீஸ்,

விடுமுறை முடிந்து, பள்ளிக் கூடங்கள் திறக்கப் போகின்றன. ஆண்டின் துவக்கத்திலேயே சில எண்ணங்களை மனத்தில் விதைத்துக் கொள்ளுங்கள்.

✸ அன்றைய பாடத்தை அன்றே படித்து விடுவேன்.

ஆட்டம் போதும்; படிக்கலாம்!



✸ புரியாத பகுதிகளை கேட்டுத் தெரிந்து கொள்வேன்.

✸ நாளைக்கு என்று எந்தச் செயலையும் ஒத்தி வைக்கமாட்டேன்.

✸ படிப்புக்கான நேரத்தை முழுமையாகப் பயன்படுத்துவேன்.

✸ என்னுடைய வளர்ச்சிக்கும், வெற்றிக்கும் இன்றைக்கு நான் கல்விக்காகச் செலுத்தும் கவனம்தான் காரணம் என்பதை நான் அறிந்திருக்கிறேன்.

✸ கல்வியில் நான் செலுத்தும் அதே கவனத்தை, என்னுடைய செயல்களிலும் கொண்டிருப்பேன்.

✸ படிப்போடு, நடத்தையும் மிக முக்கியம் என்பதில் கவனமாயிருப்பேன்!

இவை சில அடிப்படை விஷயங்கள்.

கல்வி என்பது பாடங்களைப் படிப்பது மட்டுமல்ல; நல்ல பழக்கங்களையும் நல்ல குணங்களையும் ஏற்படுத்திக் கொள்வதும்தான்! அப்படியொரு புரிதல் இந்த ஆண்டு அனைவருக்கும் ஏற்படட்டும்!

- அன்புடன்

கோகு

டி.வி. பார்க்கக் கூடாது!


என் தம்பியின் வகுப்பில் நடந்த ஜாலியான கலாட்டா இது. அன்று வகுப்பறைக்கு வந்த ஆங்கில ஆசிரியர், கரும்பலகையில் 'A முதல் Z' வரை எழுதிவிட்டு, வகுப்பில் கடைசி பெஞ்சில் அமர்ந்திருந்த ரவியை எழுப்பி படிக்கச் சொல்லியுள்ளார்.

ரவியும் படிக்கத் தொடங்கினான். ஆனால் அவன் 'T' மற்றும் 'V' எழுத்துக்கள் வரும் இடங்களில் மட்டும் கைகளால் கண்களை மூடியபடி படிக்க ஆசிரியர் காரணத்தை வினவினார். அதற்கு ரவி "சார், அப்பா டி.வி.யை பார்க்கக் கூடாதுன்னு சொன்னார்" எனக் கூற, பக்கத்தில் இருந்த மாணவன் எழுந்து "சார், நான் வளர்க்கும் நாயின் பெயர் டிவி(TV). அப்போ நான் இனிமே 'டிவி'யை பார்க்கக் கூடாதா' என வின்வினான். அதைக் கேட்டு வகுப்பறையே 'கொல்'லென்று சிரித்துள்ளது.

- மு.அருண்குமார்,
உ. எண் : 670,
பனிரெண்டாம் வகுப்பு,
ஆர்.வி. அரசு
ஆ.மே.நி. பள்ளி,
ஒசூர்



'சில்லி' சந்தோஷ்!





ஆங்கில வகுப்பு நடந்து கொண்டிருந்தது. ஆசிரியை செய்யுள் பயிற்சி நடத்திக் கொண்டிருந்தார். அது குறும்பு செய்யும் ஒரு கோழிக்குஞ்சு பற்றிய பாடல். அப்பாடலுக்கு என்ன தலைப்பு வைக்கலாம் என்று ஆசிரியை கேட்க, ஒரு மாணவன் வேகமாக எழுந்து 'சில்லி சிக்கன்' என்றான். உடனே நாங்கள் அனைவரும் சிரிக்க ஆரம்பித்துவிட்டோம். பிறகுதான் தெரிந்தது. அவன் சொல்லவந்தது silly chicken என்று. அது chilly chicken என்றாகிவிட, அன்று முதல் அவனுக்கு சில்லி சந்தோஷ் என்றே பட்டப் வந்துவிட்டது.

- அதிபன் அன்புமணி,
உ. எண் : 120, ஈரோடு

கல்கி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

கல்கி பில்டிங்க்ஸ்,
47-N.P., ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் :
சீதா ரவி

வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி :
044 - 4343 8888
(30 lines)

தொலைநகல் :
044 - 4343 8899

மின்னஞ்சல்:
ஆசிரியர் குழு :
tamilgokulam@kalkiweekly.com
விளம்பரப் பிரிவு:
marketing@kalkiweekly.com
சந்தா பிரிவு :
subscription@kalkiweekly.com
பிற தகவல்களுக்கு :
info@kalkiweekly.com

சந்தா விவரம்:
உள்நாடு :
ஒரு வருடம் : ரூ. 96/-
வெளிநாடு (விமானத்தபால்) :
ஒரு வருடம் : ரூ. 1000/-

Bharathan Publications
Private Limited,
Kalki Buildings,
47-NP, Jawaharlal Nehru Road,
Ekkaduthangal, Chennai - 600 032.

குழந்தைகளின் குதூகலம்!

‘அவன் கையெழுத்தைப் பார்க்கணுமே. அப்படியே கண்ணுல ஒத்திக்கலாம் போல இருக்கும். அப்படியே ‘முத்து முத்தா இருக்கும்’ - சிலரின் கையெழுத்தைப் பற்றி இப்படிப்பட்ட பாராட்டுக்களை பலரும் கேட்டிருப்போம்.

பொதுவாகவே, கையெழுத்து நன்றாக அமைந்தால்தான், பார்ப்பதற்கும், அதைத் தொடர்ந்து படிப்பதற்கும் ஒரு உற்சாகம் ஏற்படும். அடித்தல் திருத்தல் இல்லாமலும், கோழி கிளறுவதுபோல கிறுக்கல்களாய் இல்லாமலும் இருந்தால் வாசிப்பது சுலபமாகவும், ஆர்வத்தைத் தூண்டுவதாகவும் இருக்கும்!

அதேசமயம், ‘எழுத்துக்கள் ஒன்றோடு ஒன்று மோதாமலும், தெளிவாகவும், நேராகவும் அமையும்படி எழுதுபவர்களின் மனம், ரசிப்புத் திறன் கொண்டதாகவும், வரையறைக்குட்பட்ட நேர்மையான செயல்பாடுகளை கொண்டதாகவும் இருக்கும்’ என்று சொல்கிறார்கள் கையெழுத்து ஆய்வாளர்கள். தவிர, ‘கையெழுத்தைக்

கையெழுத்து



கொண்டு ஒருவனின் மனநிலை, குணங்கள் உட்பட

அட்டையில்: ஹரிணி

அட்டை வண்ணப்படம்: ஸ்ரீஹரி

அனைத்தையும் தெரிந்து கொள்ள முடியும்' என்றும் சொல்கிறார்கள்.

இவையெல்லாம் ஒருபுறம் இருந்தாலும், தெளிவான கையெழுத்து நம்மை பற்றிய நல்லெண்ணத்தை முதலில் ஏற்படுத்துகிறது. அப்படி எழுதுவதிலும் எழுத்துப் பிழை, ஒற்றுப் பிழை இல்லாமல் எழுதுவது இன்னமும் சிறந்த பரிமாணத்தை ஏற்படுத்தும்.

பள்ளி, கல்லூரி பொதுத் தேர்வுகள் மட்டுமல்ல, வேலை வாய்ப்புக்கான தேர்வுகளிலும்கூட கையெழுத்து எப்படி இருக்கிறது என்பது கவனிக்கப்படுகிறது. அதனால்தான் இப்போது கையெழுத்து



திருந்துவதற்கான சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டு வருகின்றன.

'இளம் வயதிலேயே கையெழுத்து அழகாக இருக்குமாறு பயிற்சி செய்து கொள்ளுங்கள்' என்றார் மகாத்மா காந்தி. தன்னுடைய இளம் வயதில் அவர் செய்யத் தவறிய விஷயம் இது என்றும் வலியுறுத்திச் சொல்கிறார்.

சரியான பதிலா இல்லையா என்கிற சந்தேகத்தை திருத்துபவர்களுக்கு ஏற்படுத்தக்கூடியவை கோணல் மாணலான கையெழுத்துக்கள். அதன்காரணமாகவே, மதிப்பெண்கள் குறைந்துவிடும் அபாயமும் உண்டு.

எனவே படிப்பதோடு கூட, திருத்தமாக தெளிவாக எழுதிப் பழகுங்கள். நெளிந்தும் வளைந்தும் குழப்பும் களேபர வடிவத்தை விட்டு தெளிவாக எழுதிப் பழகுவோம். அது வாசிப்பதற்கும் சுலபம்; தேர்விலும் பலன் தரும்.

களேபரம்!



ராகவன்

1. சந்திரசேகர ஐயர், பார்வதி தம்பதியினருக்கு திருச்சியில் இவர் பிறந்தார்.

2. நோபல் பரிசு பெற்ற இந்திய விஞ்ஞானிகளுள் ஒருவரான இவரது பள்ளிக் கல்வி விசாகப்பட்டினத்தில் துவங்கியது.

3. எப்போதும் படிப்பது, ஆராய்ச்சி செய்வது என்கிற விஷயத்திலேயே மிகவும் ஆர்வமாக இருந்தவர்.

4. இவர் ஒலியைக் குறித்தும், ஒளியைக் குறித்தும் ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

5. கொல்கத்தா பல்கலைக் கழகத்தில் பௌதிகப் பேராசிரியராக நியமிக்கப் பட்டார்.

6. பின்னர் இந்திய அறிவியல் வளர்ப்புக் கழகத்தின் தலைவராகத் தேர்வு செய்யப்பட்டார்.

7. வானம் ஏன் நீல நிறமாய் உள்ளது? என்பதனைக் குறித்து ஆராய்ச்சி செய்து வெளியிட்ட பெருமை இவரையே சாரும்.

8. 1930ஆம் ஆண்டு இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. அத்துடன் உலகின் சிறந்த அறிஞர் விருதான 'மாட்டிசி' பதக்கம் ரோம் நகரிலும், 'சர்' பட்டத்தை அன்றைய பிரிட்டிஷ் அரசும், 'ஹியூஸ்' பதக்கத்தினை லண்டன் ராயல் கழகமும் வழங்கின.

9. இவர் இந்திய விஞ்ஞான நிலையம் ஒன்றினை பெங்களூரில் நிறுவி, அதன் இயக்குனராகவும் இருந்து பணியாற்றினார்.

10. விஞ்ஞான உலகில் பலவிதமான விந்தைகள் புரிந்த இவர் 7.11.1888 அன்று பிறந்தார். மறைந்தது 21.11.1970. ஆயுள் 82 வயது.

இவர் யார்?

- பி.பூர்ணிமா, திருவாரூர்



உறுப்பினர்களுக்கான வினாடி வினா போட்டி!



1. லலித் கலா அகாடமி எந்தக் கலையை ஊக்குவிக்க தோற்றுவிக்கப்பட்டது?
   (அ) சிற்பம் (ஆ) கவிதை (இ) ஓவியம் ☐
2. வங்காள விரிகுடாவில் வந்து கலக்கும் நதி ☐
   (அ) கங்கை (ஆ) நர்மதை (இ) மகாநதி
3. கல்கத்தா வழியே பாயும் கங்கையின் துணை ஆறு ☐
   (அ) லும்பினி (ஆ) ஹூக்ளி (இ) பிரம்மபுத்ரா
4. ஒரிஸ்ஸாவின் புகழ்பெற்ற கடற்கரை நகரம் ☐
   (அ) புவனேஸ்வர் (ஆ) பூரி (இ) கோனார்க்
5. கேரளாவில் கப்பல் கட்டும் தளம் உள்ள இடம் ☐
   (அ) திருவனந்தபுரம் (ஆ) கொல்லம் (இ) கொச்சி
6. 'எலிபெண்டா' குகைகள் அமைந்துள்ள மாநிலம் ☐
   (அ) மகாராஷ்டிரா (ஆ) குஜராத் (இ) மத்தியப் பிரதேசம்

மேலே கொடுக்கப்பட்டுள்ள கேள்விகளுக்கு சரியான விடையை மட்டும் கட்டத்தினுள் எழுதி கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரிக் கூப்பனை ஒட்டி அனுப்பி வையுங்கள்.

✱ சிறுவர் சங்க உறுப்பினர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கேற்கலாம். உறுப்பினர் எண் மற்றும் முகவரியை தெளிவாக எழுதி அனுப்பவும்.

✱ முகவரி கூப்பன் ஒட்டாத விடைகள் பரிசீலிக்கப்படமாட்டாது.

✱ ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.

✱ முடிவு தேதி : 15.6.2009

வினாடி வினா போட்டி
ஆசிரியர், கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

வெற்றியின்

என்.சொக்கன்



உங்களுக்கு சாமுவெல் லாங்க்லி தெரியுமா?

தெரியாதா? சரி பரவாயில்லை, ரைட் சகோதரர்களைத் தெரியுமா?

கரெக்ட். ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்தவர்கள் தான்.

ரைட் சகோதரர்களைப்பற்றி தெரிந்துவைத்திருக்கிற நமக்கு, சாமுவெல் லாங்லியைமட்டும் ஏன் தெரியவில்லை? இதன் பின்னணியில் ஒரு முக்கியமான அறிவியல் பாடம் இருக்கிறது.

மனிதனுக்குப் பறக்கும் ஆசை பல நூற்றாண்டுகளாக இருக்கிறது. இதனால்தான், அநேகமாக எல்லா ஊர்ப் புராணக் கதைகளிலும் பறந்து செல்கிற கடவுள்கள், தேவதூதர்களைப் பார்க்கமுடிகிறது.

சுமார் 125 வருடங்களுக்கு முன்புதான், மனிதனால் பறக்கமுடியும் என்கிற சிந்தனை வலுப்பட்டது. பல அறிவியல் அறிஞர்கள் விமானத்தை உருவாக்கும் கனவோடு ஆராய்ச்சியில் இறங்கினார்கள்.

அமெரிக்காவின் மாஸாஷுசெட்ஸ் மாகாணத்தில் பிறந்த சாமுவெல் லாங்க்லி கணிதப் பேராசிரியர் - வானவியல், இயற்பியல் சார்ந்த துறைகளிலும் அவருக்கு ஆர்வம் அதிகம்.

ஐம்பது வயதாகியிருந்தபோது, அவருக்கும் 'பறக்கும்' ஆசை வந்தது.

அன்றைய அமெரிக்காவிலும் மற்ற நாடுகளிலும் ஏகப்பட்ட பேர் விமானம் உருவாக்குவதற்கான ஆராய்ச்சிகளில் ஈடுபட்டிருந்தார்கள்.

ஆனால், இவர்களைவிட, லாங்க்லிக்கு அனுபவமும், திறமையும் அதிகம். ஆகவே, கச்சிதமாக ஒரு திட்டம் தயார் செய்துகொண்டு வேலைகளைத் தொடங்கினார்.

மிக விரைவில், லாங்க்லியின் மாடல் விமானம் தயாராகிவிட்டது. அதை வெற்றிகரமாகப் பறக்க வைத்தும் காண்பித்தார் அவர்.

அவ்வளவுதான்! அறிவியல் அறிஞர்கள் உட்பட அனைவரும் பிரமித்தார்கள். மனிதர்கள் உட்கார்ந்து பயணம் செய்யக்கூடிய ஒரு விமானத்தை அவர்தான் கண்டறியப்போகிறார் என்று எல்லோரும் பேசிக் கொண்டார்கள்.

ரைட் சகோதரர்களும் அப்போது இதே ஆராய்ச்சியில்தான் ஈடுபட்டிருந்தார்கள். ஆனால், அவர்களை யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. காரணம், ரைட் சகோ

விளிம்பு!

தரார்கள் அதிகம் படிக்கவில்லை, பெரிய அனுபவமோ, பின்னணியோ, பணமோ எதுவும் அவர்களிடம் கிடையாது. அவர்களோடு ஒப்பிடும்போது சாமுவெல் லாங்க்லி எங்கேயோ உயரத்தில் இருந்தார்.

1898ம் ஆண்டு, சாமுவெல் லாங்க்லி அமெரிக்க ராணுவத்தை அணுகினார். 'நான் ஒரு விமானம் தயார் செய்யப்போகிறேன். அதற்கு நீங்கள் நிதி உதவி செய்ய வேண்டும்' என்று கேட்டார்.

ராணுவ அதிகாரிகள் யோசித்தார்கள், 'நம்மிடம் ஒரு விமானம் இருந்தால், பல விதத்தில் வசதி' என்று முடிவு செய்தார்கள். 'எவ்வளவு பணம் வேண்டும்?' என்றார்கள். 'ஐம்பதாயிரம் டாலர்' என்றார் லாங்க்லி.

அந்தக் காலத்தில், அது ரொம்பப் பெரிய தொகை. ஆனால் லாங்க்லியை நம்பி அவ்வளவு பணத்தை ஒப்படைத்தது அமெரிக்க ராணுவம்.

பணத்தை வாங்கிக்கொண்ட சாமுவெல் லாங்க்லி, ராப்பகலாக உழைத்து விமான மாடல்களை உருவாக்கினார். பறக்கவிட்டுப் பரிசோதனை செய்தார். சின்னச் சின்ன தவறுகளைக் கண்டுபிடித்துச் செதுக்கிச் சரி செய்தார்.

ஒருவழியாக, ஐந்து வருடங்கள் கழித்து சாமுவெல் லாங்க்லியின் விமானம் பறக்கத் தயாராகிவிட்டது. அந்த விமானத்துக்கு 'கிரேட் ஏரோட்ராம்' என்று பெயர் சூட்டியிருந்தார் அவர்.

1903ம் வருடம் அக்டோபர் மாதம், கிரேட் ஏராட்ராம் பறக்கவிடப்பட்டது. இந்த விமானத்தில் பைலட்டாக அமர்ந்து பயணம் செய்தவர், லாங்க்லியின் ஆராய்ச்சிகளில் முக்கியப் பங்கு வகித்த சார்லஸ் மான்லெ.

'சார்லஸ், நம்முடைய பல வருடக் கனவு இன்றைக்கு நிறைவேறப்போகிறது' என்றார் லாங்க்லி.

'ஆமாம் சாமுவெல்' என்று சிரித்தார் மான்லெ.

'சரி, நீ புறப்படு. ஆல் தி பெஸ்ட்' என்று கட்டை விரல் உயர்த்திக் காட்டினார் லாங்க்லி. விமானம் கிளம்பியது.

ஆனால், புறப்பட்ட சில நிமிடங்களுக்குள், அந்த விமானம் தடுமாறித் தண்ணீரில்



விழுந்தது. மான்லெ உயிர் தப்பியதே பெரிய விஷயம்தான்.

லாங்க்லியின் முதல் பறக்கும் முயற்சி படுதோல்வியில் முடிந்தது. அப்போதும் அவர் நம்பிக்கை இழக்கவில்லை. மீண்டும் ஆராய்ச்சியைத் தொடங்கிவிட்டார்.

இங்கேதான், ரைட் சகோதரர்கள் வித்தியாசப்பட்டார்கள். அவர்களும், தங்கள் முயற்சியில் ஏகப்பட்ட தோல்விகள், சறுக்கல்களைப் பார்த்திருந்தார்கள். ஆனால், நம்பிக்கை இழக்கவில்லை, எப்போதும் போல் பரிசோதனை முயற்சிகளைத் தொடர்ந்தார்கள்.



"இந்த முறை தவறு நடக்க வாய்ப்பே இல்லை" என்றார் லாங்க்லி ஆனால் இப்போதும் அவருடைய நம்பிக்கை பலிக்கவில்லை.

லாங்க்லியின் இரண்டாவது விமானப் பரிசோதனை ஓட்டம் தோல்வியடைந்த சில நாள் கழித்து, ரைட் சகோதரர்கள் தங்களுடைய விமானத்தை விண்ணில் செலுத்தினார்கள். முதன் முறையாக, மனிதன் விண்ணில் பறப்பதை உலகம் வாய்பிளந்து பார்த்தது.

அந்த வெற்றிக்குப் பின்னால், லாங்க்லியின் பெயரையே எல்லோரும் மறந்து போனார்கள்.

அடுத்த பல வாரங்களில் எல்லாத் தவறுகளையும் சரி செய்தார்கள். மீண்டும் அடுத்த பயணத்துக்கு நாள் குறிக்கப்பட்டது.


'இந்த முறை தவறு நடக்க வாய்ப்பே இல்லை' என்றார் லாங்க்லி. ஆனால், இப்போதும் அவருடைய நம்பிக்கை பலிக்கவில்லை. இரண்டாவது முறையாக 'கிரேட் ஏரோட்ராம்' விமானம் உடைந்து தண்ணீருக்குள் விழுந்தது.

லாங்க்லி மனம் உடைந்து போனார். அதன்பிறகு அவர் தன்னுடைய பறக்கவிடும் முயற்சிகளில் ஈடுபடவே இல்லை.

அறிவியல், தொழில்நுட்ப ஆராய்ச்சிகள், கண்டுபிடிப்புகள் அனைத்துக்கும் நிறையப் பொறுமை அவசியம். நிறைய மெனக்கெடல், முனைப்பு, ஆர்வம், இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தோல்விகளில் துவண்டுவிடாமல் தொடர்ந்து ஈடுபடும் மன திடம் அவசியம்.

இதெல்லாம், சாமுவெல் லாங்க்லிக்கும் நன்றாகத் தெரியும். ஆனாலும், ஒரு தருணத்தில் அவர் தனது நம்பிக்கையை இழந்தார். அவருக்குப் பதிலாக, ரைட் சகோதரர்கள் நம் நினைவில் இடம் பிடித்துவிட்டார்கள்.

* ரைட் சகோதரர்கள்



2009

அழ. வள்ளியப்பா நினைவுச் சிறுகதைப் போட்டி



மொத்தப் பரிசுத் தொகை
ரூ.2,000/-

முதல் பரிசு **ரூ.1,000/-**

இரண்டாம் பரிசு **ரூ.500/-**

மூன்றாம் பரிசு **ரூ.500/-**

(ரூ.250/- வீதம் இருவருக்கு)

சிறுவர் இலக்கியத்துக்காக தம்மை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட குழந்தைக் கவிஞர் அழ.வள்ளியப்பா நினைவாக இவ்வாண்டும் சிறுகதைப் போட்டி நடத்தப்படுகிறது. கலந்து கொண்டு சிறப்பியுங்கள்.

நிபந்தனைகள் :

* இந்தப் போட்டியில் பள்ளி மாணவ, மாணவியர் (+2 வரை) மட்டுமே கலந்து கொள்ள முடியும். ஆகவே போட்டிக்குக் கதையை அனுப்புவோர், கண்டிப்பாக படிக்கும் வகுப்பு, பள்ளி மற்றும் வீட்டு முகவரியைக் குறிப்பிட வேண்டும்.
* கதைகள் சிறுவர்களுக்கு ஏற்ற வகையில் இருக்க வேண்டும். சமூகம், நகைச்சுவை, துப்பறிதல் என்று எந்த வகையாகவும் இருக்கலாம். உங்கள் சொந்தக் கற்பனைதான் என்ற உறுதிமொழி கடிதத்தைக் கதையுடன் இணைக்க வேண்டும்.
* பிரசுரத்துக்குத் தேர்வாகாத கதையைத் திருப்பி அனுப்ப இயலாது. ஆகவே, தபால் தலைகளை இணைக்க வேண்டாம். ஒருவரே எத்தனை கதைகளை வேண்டுமானாலும் அனுப்பலாம்.
* அயல்நாட்டில் வசிப்பவர்கள் இந்தியாவில் நண்பர் அல்லது உறவினர் முகவரியை அளிக்க வேண்டும். கதைகளை முதல்முறை வெளியிடும் உரிமை கோகுலத்துக்கே. பிறகு இதன் உரிமை கதாசிரியரைச் சாரும்!
* போட்டி முடிவு வெளியாகும்வரை கடிதப் போக்குவரத்தோ, விசாரிப்போ கூடாது. போட்டி குறித்து எழும் பிரச்னைகளுக்கும் சந்தேகங்களுக்கும் ஆசிரியர் அளிக்கும் தீர்ப்பே இறுதியானது.

முடிவுத் தேதி :
31.7.2009


அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர், கோகுலம்,
அழ. வள்ளியப்பா நினைவுச்
சிறுகதைப் போட்டி - 2009
47, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

அறிந்திரு!

அரசமரத்தை வளர்த்திடு
அறிவுடனே நடந்திடு
ஆலமரத்தை வளர்த்திடு
ஆழம் புரிந்து செயல்படு
இலந்தைச் செடியை வளர்த்திடு
இரக்கத்துடன் நடந்திடு
ஈச்ச மரத்தை வளர்த்திடு
ஈகையோடு வாழ்ந்திடு
உணிச்செடியை வளர்த்திடு
உழவுத் தொழிலை மதித்திடு
ஊதாப்பூவை முகர்ந்திடு
ஊரே போற்ற உயர்ந்திடு
எலுமிச்சை செடியை வளர்த்திடு
எவர்க்கும் பகிர்ந்து கொடுத்திடு
ஏற்றம் இறைக்கும் உழவரை
ஏற்றுநீயும் போற்றிடு
ஐயம் நீங்கக் கற்றிடு
ஐந்தறிவு ஜீவன் மதித்திடு
ஒரு தொழிலை அறிந்தாலும்
ஒன்றுக்குமேல்
கற்றிடு
ஓடியாடி விளையாடு
ஓடும் நீரைச்
சேமித்திடு
ஔவை சொல்லைக்
கேட்டிடு
ஔடதம் நீயும்
அறிந்திடு

- பி.தங்கவேல்,
ஒன்பதாம் வகுப்பு,
எஸ்.எம்.
மேல்நிலைப் பள்ளி,
தாரமங்கலம்





மணக்கும் ரோசாப்பூ!

வண்ண வண்ணத் தொட்டியில்,
வளர்ந்து மணக்கும் ரோசாப்பூ!
கண்ணைக் கவரும் வீட்டிலே
காட்சிக் கழகு ரோசாப்பூ!

மஞ்சள் வெள்ளைச் சிவப்பிலும்
மலரும் நீல நிறத்திலும்,
பிஞ்சு நெஞ்ச மகிழ்ச்சியாய்ப்
பெருமை பேசும் ரோசாப்பூ!

சட்டைப் பையில் வைக்கலாம்
சடையைப் பின்னிச் சொருகலாம்
நெட்டை மாலை கட்டலாம்
நேரு மாமா சட்டைப்பூ!

பிச்சுப் பிச்சுக் கோலமாம்
பெருமை அழகு சேர்க்கலாம்
மெச்சும் வாசப் பன்னீராம்,
மேனிக் கினிய ரோசாப்பூ!

கையில் விரும்பிக் கொடுக்கலாம்
கழுத்து மாலை தொடுக்கலாம்,
வெய்யில் நேரம் குளிர்ச்சியாய்,
வீசும் காற்றும் மணக்குமே!

- கவிஞர் இளங்கீரன்,
மாச்சம்பாளையம்

கண்களுக்கு ஊட்டம் தந்து
கவலை நீக்கும் பப்பாளி
கோடை வெயிலுக்கு மாற்றாக
குளிர்ச்சி அளிக்கும் தர்பூசணி

மாதா ஊட்டாத சத்தினையும்
மாம்பழம் அளிக்கும் நன்றாக
ஆப்பிள் ஒன்றை தினம் உண்ண
ஆரோக்கியம்தான் மேம்படுமே!

வாழை பலா மாதுளையென்று
வாழ்க்கைக் குகுந்த கனி பலவும்
ஏராளமாய் இருக்கையிலே
எதற்கோ துரித உணவுவகை?

இயற்கை வழங்கும் பழவகையை
இயன்றவரையில் தவிர்க்காமல்
ஆனந்தமாய் சுவைத்திடுவோம்
ஆரோக்கியமாய் வாழ்ந்திடுவோம்!

- அதிபன் அன்புமணி,
உ. எண் : 120,
ஈரோடு



ஆரோக்கியம் மேம்படும்!

கடல் வழி!

கௌதம்ராம்

பதினான்காம் நூற்றாண்டு முதல் பதினேழாம் நூற்றாண்டு வரையிலான காலகட்டத்தில்தான் புதிய கடல் வழி கண்டுபிடிக்கும் நோக்கத்துடன் பல ஐரோப்பியர்கள் பயணித்தார்கள். அவர்களுள் பிரபலமானவர்கள் கிரிஸ்டோபர் கொலம்பஸ், வாஸ்கோட காமா, பெர்டினான்ட் மெகல்லன் ஆகியோர்.

இந்தியாவுக்கு கடல் வழி கண்டுபிடிக்க முதலில் புறப்பட்டவர் வாஸ்கோட காமா, 1497ல், போர்ச்சுக்கல் நாட்டு மன்னரின் ஆணைப்படி, புறப்பட்ட வாஸ்கோட காமா. இந்தியப் பெருங்கடலை கடல் வழியாகச் சென்றடைவது சாத்தியமில்லை என்றே பலரும் நம்பினார்கள். தென்னாப்பிரிக்காவின் நன்னம்பிக்கை முனையைக் கடந்து, ஆப்ரிக்காவின் பல துறைமுகங்களில் தங்கி, தன் பயணத்தைத் தொடர்ந்த வாஸ்கோடகாமா சுமார் பத்து மாத பயணத்துக்குப் பிறகு, இந்தியாவின் மேற்குக் கடற்கரையில் உள்ள கள்ளிக்கோட்டையை அடைந்த போது உற்சாகமான வரவேற்பு கிடைத்தது. ஆனால், மூன்றே மாதங்களில் அவர் மீண்டும் போர்ச்சுகல்லுக்கு திரும்பினார்.

போர்ச்சுகல்லை அடைந்தவுடன், மன்னர் அவருக்கு பரிசுகள் அளித்ததோடு, கப்பற்படைத் தளபதி பதவியும் அளித்தார். விரைவிலேயே, படைவீரர்கள் கொண்ட 20 கப்பல்களுடன் மீண்டும் இந்தியாவுக்கு அனுப்பி வைத்தார். இம்முறை, அரா



கண்டவர்கள்!

பிய வணிகர்களுடன் போரிட்டு, வென்று, தன் பெருமையை நிலைநாட்டிய பிறகு இந்தியாவை வந்தடைந்தார் அவர். மூன்றாம் முறையாக இந்தியா வந்த வாஸ்கோடகாமா 1524 டிசம்பரில் மரணமடைய, அவரது உடல் போர்ச்சுக்கல்லுக்கு எடுத்துச் செல்லப்பட்டு, இறுதி மரியாதைகளுடன் அடக்கம் செய்யப்பட்டது.

இவர் கண்ட கடல் வழியால் போர்ச்சுக்கல் தன் வாணிபத்தைப் பெருக்கியது. குறிப்பாக ஐரோப்பிய வட்டாரத்தில் மிளகு வியாபாரத்தில் கொடிகட்டிப் பறந்தது.

வாஸ்கோட காமாவுக்கு முன்பாக இந்தியாவுக்கு கடல் வழி காணும் நோக்கத்துடன் புறப்பட்டார் பார்தோலோமே டயஸ். இவரது பயணம் கடுமையான கடல் சீற்றத்தால் பாதிக்கப்பட்டது. அதனால் அவர் மீண்டும் போர்ச்சுக்கல்லுக்குத் திரும்ப நேரிட்டது. அவரது ஆலோசனையின் படிதான், ஆப்ரிக்காவின் தென்கோடி முனைக்கு 'நன்னம்பிக்கை முனை' என போர்ச்சுக்கல் மன்னர், பெயரிட்டார்.

வாசனைப் பொருட்கள் வியாபாரம் தான் இத்தாலிய நாட்டு பயணக்காரரான கிறிஸ்டோபர் கொலம்பசை இந்தியாவுக்கு கடல் வழி கண்டுபிடிக்கத் தூண்டியது. மார்கோபோலோவின் பயணக் குறிப்புகள் கொலம்பசை பெரிதும் கவர்ந்தன. உலகம் உருண்டை என்ற உண்மையை அறிந்தவரான கொலம்பஸ், அட்லாண்டிக் கடல் வழியாக, மேற்கு முகமாகப் பயணித்தால் ஆசியாவை அடைந்துவிடலாம் என்று நம்பினார். தன் பயணத்துக்கு உதவிகோரி அவர் போர்ச்சுக்கல் மன்னரை அணுக, அவர் அதில் ஆர்வம் காட்டவில்லை. ஸ்பெயின் மன்னரின் ஆதரவில், 1492ல், நூறு பேர் கொண்ட குழுவுடன் தன் கடற்பயணத்தைத் துவக்கினார்.

இரண்டு மாதங்களுக்குப் பிறகு, அவர்கள் கண்ட நிலப்பரப்பை அமெரிக்கா என்று நினைத்தனர். ஆனால் அது மேற்கு இந்தியத்தீவுக் கூட்டத்தில் அடங்கிய ஒரு தீவுதான் என்று தெரிய வந்தது. இரண்டா

* ஜேம்ஸ் குக்



* அமெரிக்கோ வெஸ்புகி



* வாஸ்கோடா காமா



வது கடற்பயணத்தின் போதும் அமெரிக்காவை அடைய வில்லை. 1502ல் மூன்றாவது முறையாகப் பயணம் மேற்கொண்ட கொலம்பஸ் வெனிசுலாவின் கடற்கரையில் சென்று இறங்கினார். அதற்கு அடுத்து மேற்கொண்ட பயணம் மத்திய அமெரிக்கப் பகுதியில் உள்ள கடற்கரையில் முடிவடைந்தது. அந்தப் பகுதிக்கு 'கோஸ்டாரிகா' என்று பெயரிட்டார் கொலம்பஸ்.



* மெகல்லன்

'அமெரிக்கோ வெஸ்புகி' என்ற கடற்பயணி 1497 முதல் 1504 வரை ஸ்பெயின் மற்றும் போர்ச்சுக்கல்லிலிருந்து புறப்பட்டு, மத்திய மற்றும் தென் அமெரிக்காவுக்குக் கடற்பயணம் மேற்கொண்டார். இவர் சென்ற நாடுகளில் பிரேசில், வெனிசுலா ஆகியவைகளும் அடக்கம். 'கொலம்பஸ் சென்ற நிலப்பகுதி, அவர் நினைத்தது மாதிரி இந்தியா அல்ல. அது ஒரு புதிய நிலப்பகுதி' என்று கண்டுபிடித்துச் சொன்னவர் அமெரிக்கோ வெஸ்புகிதான்.




வாஸ்கோட காமாவுக்கு முன்பாக இந்தியாவுக்கு கடல் வழி காணும் நோக்கத்துடன் புறப்பட்டவர் பார்தோலோமே டயஸ்.

'அமெரிக்காவின் நான்கு கடற்பயணங்கள்' என்ற நூலில் தான் கண்டுபிடித்த புதிய நிலப்பரப்பு தம் பெயரிலேயே அமெரிக்கா என்று அழைக்கப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார் வெஸ்புகி. அவர் விருப்பப்படியே அமெரிக்கா இன்றைய பெயரைப் பெற்றது.

1480ல் போர்ச்சுக்கல்லில் பிறந்த ஃபெர்டினாண்ட் மெகல்லன், அந்நாட்டு அரசியின் மாளிகையில் வேலை பார்த்தவர். கொலம்பஸ் கண்டுபிடிக்கத் தவறிய இந்தியாவுக்கான கடல் வழியை, தான் கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆர்வம் கொண்டார் மெகல்லன். ஸ்பெயின் மன்னரது ஆதரவைப் பெற்று, செயலில் இறங்கினார். 1519ல், சுமார் 300 வீரர்களுடன் புறப்பட்ட மெகல்லன், மூன்றாண்டு பயணத்துக்குப் பிறகு, 20 வீரர்களே எஞ்சிய நிலையில் பலிப்பைன்ஸ் தீவுப் பகுதியில் கொலை செய்யப்பட்டார். ஆனாலும், அவரது பயணம் சரித்திரத்தில் இடம் பிடித்தது. பசிபிக் பெருங்கடலுக்கு அந்தப் பெயரை சூட்டியவர் இவரே!

கேப்டன் ஜேம்ஸ் குக் பிரிட்டனைச் சேர்ந்த ஒரு சாகச கடற்பயணக்காரர். பசிபிக் பெருங்கடல் வழியாக மூன்று பயணங்கள் மேற்கொண்டு, இருமுறை உலகைச் சுற்றி வந்தவர். இவர்களைத் தவிர நிலவழியே பயணித்தவர்களும் பலர்.

* கொலம்பஸ்



யுவான் சுவாங், பாஹியான் (சீனா), இபின் பதூதா (மொராக்கோ) போன்றவர்கள் அவர்களில் ஒரு சிலர். இவர்களின் பயண அனுபவங்கள் சரித்திரப் பொக்கிஷங்கள்!



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil'

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்க்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032

நாய்களை 'வாக்கிங்' கூட்டிட்டுப் போறது, பைக்கில் உட்கார வெச்சுக் கூட்டிட்டுப் போறது, காரில் கூட்டிட்டுப் போறதுன்னு பல்வேறு காட்சிகளை நாம பார்த்திருப்போம். ஆனால், காரில் நாய்களுக்கு உரிய மரியாதை கொடுக்கும் விதமாக ஹோண்டா நிறுவனம் 'வாவ் கார்'களை உருவாக்கியிருக்காங்க. இந்த வகைக் கார்களைச் 'செல்லப் பிராணிகளின் நட்புக் கார்கள்' என வர்ணிக்கின்றனர். போக்யோ மோட்டார் கண்காட்சியில் அறிமுகமான இவ்வகை கார்களுக்கு அமெரிக்காவில் வரவேற்பு அதிகமாகியுள்ளது. கார் ஓட்டுநரின் பக்கத்திலே பெட்டி ஒன்று உள்ளது. அதில் செல்ல பிராணிகள் சீட் பெல்ட் பொருத்தப்பட்டு சூப்பராக உட்கார்ந்து கொள்ளலாம். இந்தப் பெட்டியைக் கழற்றி எடுத்துக் கழுவி, மீண்டும் பயன்படுத்தலாம். 'பெட்ஸ்'களுக்கு ஏற்ற பெட்டி!

பன்றிக்குட்டிக்கு இரண்டு வாய் - மூன்று கண்கள்!

சீன விவசாயி 'லியு டிங்க்சேங்க்ஸி'ன் பண்ணையில் பன்றி ஒன்று எட்டு குட்டிகளை ஈன்றது. அதில் ஒரு பன்றிக்குட்டி இரண்டு வாய்கள் மற்றும் மூன்று கண்களைக் கொண்டதாக இருந்தது. இந்தக் குட்டியைப் பார்த்தவுடன் லியு, ஏதோ ஓர் அதிசய மிருகம் எனப் பயந்தார். தாய்ப் பன்றி, ஆரோக்கியமாக இருக்கின்றதாம். எந்த நோயும் அதற்கு இல்லையாம். இப்படி உருவ மாறுபாடு ஏற்பட மரபியல் மாற்றங்கள் அல்லது உணவில் உள்ள மாசு காரணமாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

தோட்டக்காரன் பேரு ரோபோ

ரோபோ இன்று வேளாண்துறைக்குள்







ளும் நுழைந்துவிட்டது. ரோபோ தோட்டக்காரனை உருவாக்கும் முயற்சியில் மசாசூட்ஸ் தொழில்நுட்பப் பள்ளி மாணவர்கள் வெற்றி கண்டுள்ளனர். இந்த ரோபோக்கள் செடிக்குத் தண்ணீர் ஊற்றுவது, அறுவடை செய்வது போன்ற பல் வேறு தோட்ட வேலைகளைச் செய்கின்றன. தாவரங்கள், பூமியில் பொருத்தப்பட்ட சென்சார்கள் வாயிலாகத் தங்களின் நீர் மற்றும் உரத் தேவையைத் தெரிவிக்கின்றன. ரோபோக்களில் பொருத்தப்பட்ட காமிராக்கள் அறுவடைக்குத் தயாரான பழங்களை நோட்டமிடுகின்றன. இப்படி ஒவ்வொரு செடியும், தோட்டக்கார ரோபோவும் கணினி தொடர் இணையத்தில் இணைக்கப்பட்டுள்ளன. அட... அடுத்து சாப்பிடற ரோபோ வருமோ?

எந்தக் கலர் உருளைக் கிழங்கு வேண்டும்?

உருளைக் கிழங்கை நாம ஒரே நிறத்துலதான் பார்த்திருப்போம். ஆனா, கலர்கலரா உருளைக்கிழங்கு வந்திடுச்சு. ஜப்பானில் உள்ள ஹெக்காய்டோ வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் பல வண்ணங்களில் உருளைக் கிழங்கைப் பயிரிடத் தொடங்கிட்டாங்க. சிவப்பு, மஞ்சள், நீலம்ன்னு கலர் கலரா கிடைக்கிற உருளைக் கிழங்கு உடம்புக்கு ஆரோக்கியமானதுன்னும் கண்டுபிடிச்சிருக்காங்க. சிவப்பு மற்றும் நீல நிற உருளைக்கிழங்கு வகைகள் உடலில் உள்ள கொழுப்பின் அளவைக் குறைக்க உதவுதுன்னு சொல்லுறாங்க. உங்களுக்கு எந்தக் கலர் உருளை வேணும்.

'பிரிஜ் கார்!'

முனைவர் ஆகுரா



வழக்கம்போல அந்த ஆண்டும் சோழ புரத்தை புரட்டிப் போட்டது வெள்ளம். வீடுகளை இடித்தும், பொருட்களை நாசப் படுத்தியும் மக்களைக் கஷ்டப்படுத்திய வெள்ளம், சில நாட்களில் வடிந்தது.

மக்களின் துன்பத்தை உணர்ந்த மன்னன் இரண்யவர்மன் ஓர் அறிவிப்பை வெளியிட்டான். 'அடுத்த ஆண்டு இது போல் சோழபுரத்தை வெள்ளம் தாக்காமல் இருக்க யார் நல்ல வழி சொல்கிறார்களோ அவர்களுக்கு பரிசளிக்கப்படும்.'

திசையெங்கும் தண்டோரா ஒலித்தது.

சில நாட்களுக்குப் பிறகு, ஒரு இளை ஞன் அரசவைக்கு வந்தான். அவன் இரண்யவர்மனை நோக்கி, "ஐயாயிரம் பொற்காசுகளை எனக்குத் தந்தால், ஊருக்குள் வெள்ளம் வராமல் நான் பார்த்துக் கொள்வேன்" என்றான்.

"அதெப்படி? வழியைச் சொன்னால் தான் பரிசு" என்றான் மன்னன்.

"இல்லை; பரிசைத் தாருங்கள். நான் கட்டுப்படுத்துகிறேன்" என்றான் இளை ஞன்.

கடைசியில், ஐயாயிரம் பொற்காசுகளை அவனுக்கு அளித்த மன்னன், அவனை கண்காணிக்க இரு காவலரையும் நியமித் தான். மறுநாள், காவலர் சொன்ன செய்தி மன்னனை வியக்க வைத்தது.

"என்ன? பொற்காசுகளை ஆற்றில் வீசுகிறானா?"

"ஆம் மன்னா. கைநிறைய காசை அள்ளி ஆற்றில் வீசுகிறான். அந்தக் காசு களை எடுக்க, வெள்ளத்தையும் பார்க்கா மல், மக்கள் நீரில் குதித்துத் தேடுகிறார்கள்."

என்ன காரணமாக இருக்கும் என்று யோசித்தான் மன்னன். எதுவும் புரிய வில்லை அவனுக்கு.

தொடர்ந்து இதுபோல் நடக்கவே, மக்கள் தினமும் ஆற்றங்கரையில் கூடி னார்கள். இவன் பொற்காசுகளை வீசிய வுடன் இடுப்பில் கயிறு கட்டிக் கொண்டு நீரில் இறங்கினார்கள். ஆற்றின் நடுவே பெரும் கற்களுக்கும் பாறைகளுக்கும் கீழே விழுந்த காசுகளை எடுக்க முயன்றார்கள். கடப்பாறைகளால் பாறைகளை உருட்டி நகர்த்தினார்கள். காசுகளை எடுத்து கும்மாளமிட்டார்கள்.

காசுகளை எடுப்பதில் சந்தோஷப்பட்ட அவர் களுக்கு, பாறை களும் பெரும்



கற்களும் கரையோரம் ஒதுக்கப்பட்டது புரியவில்லை. அடுத்த நாள், மன்னனை ஆற்றங் கரைக்கு அழைத்துச் சென்று காட்டினான் அந்த இளைஞன். கரை நன்கு உயர்ந்திருந்தது.

''இனி ஊருக்குள் வெள்ளம் வராது மன்னா. கரைகளும் வலுத்துவிட்டன. உயரமும் கூடிவிட்டது. தாங்கள் கொடுத்த பொற்காசில் மீதி'' என்று கூறி முடிப்பையும் திரும்பக் கொடுத்தான்.

அவனது புத்திக் கூர்மையைப் பாராட்டிய இரண்யவர்மன், அவனையே தன் அமைச்சனாகவும் நியமித்துக் கொண்டான்.

ஐயாயிரம் பொற்காசுகள்!

தா.மணிமோகன்,
பதினொன்றாம் வகுப்பு,
அறிஞர் அண்ணா
அரசினர் ஆண்கள்
மேல்நிலைப்பள்ளி,
வெள்ளக்கோவில்.




'ஸ்புரூஸ்'
தாத்தா
வயது 9550

உலகிலேயே பழைமையான மரம்

வட அமெரிக்காவில் உள்ள ஐந் தாயிரம் ஆண்டுகள் பழைமையான பைன் வகை மரங்கள்தான் உலகிலேயே மிகப் பழைமையானவை என கருதப் பட்டு வந்தது. ஆனால் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் ஸ்வீடன் நாட்டு காடுகளில் 8 ஆயிரம் ஆண்டுகள் பழமையான 20 மரங்களும், 9,550 ஆண்டுகள் பழைமையான ஒரு மரமும் இருப்பதும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

ஸ்புருஸ் என்னும் மர வகையைச் சேர்ந்த இந்த மரங்கள்தான் உலகிலேயே மிகப் பழைமையானவை என ஆராய்ச்சி யாளர்கள் கூறியுள்ளனர். அடிமரம் காய்ந்து போனாலும் அதன் வேர்களால் அந்த மரம் இன்னும் வாழ்ந்த கொண்டு இருப்பது வியப்புக்குரியது.

- ப.ரம்யாஷினி, சைவ மங்கையர் வித்தியாலயம், நான்காம் வகுப்பு, இலங்கை

வண்ணத்துப் பூச்சி

ஸ்காட்லாந்து நாட்டில் ஒரு வகை வண்ணத்துப் பூச்சிகள் உள்ளன. அவற்றின் இரு சிறகுகளிலும் நல்ல ஒளி மிகுந்த மஞ்சள் நிறத்தில் சிலுவையின் உருவம் பொறிக்கப்பட்டுள்ளது. அவை சிறகுகளை அடித்துக் கொண்டு பறக்கும்போது சூரிய ஒளி பட்டு சிலுவை அடையாளம் மிகத் தெளிவாக தெரியும். அந்நாட்டு மக்கள் சிலுவைக் குறியுள்ள இச்சிறகுகளை கண்ணாடிப் புட்டியினுள்ளே வைத்து புனிதப் பொருளாகப் பாதுகாக்கின்றனர்.

சீனாவில் காணப்படும் ஒரு வகை வண்ணத்துப் பூச்சியின் பெயர், உலகப் பட வண்ணத்துப் பூச்சி என்பதாகும். அதன் சிறகுகளில் பூமியின் எல்லாப் பரப்புகளும் சமுத்திரங்களும் தெளிவாக காட்டப்பட்டிருக்கின்றன.

- ம.விவேக், குட்டம்

அபாயகரமான மீன்

தென்னமெரிக்க ஆறுகளில் காணப் படும் 'பிரான்ஹா' எனும் மீன் மிக ஆபத்தானது. சுமார் 25 செ.மீ. நீளமே வளரக் கூடிய இவை கூட்டம் கூட்டமாகத் திரியும். இவற்றின் பற்கள் மிகக் கூர்மை யானவை; தாடைகள் வலிமையானவை. ஒரு கடியில் ஒரு துண்டு மாமிசத்தைப் பிய்த்து எடுத்துவிடும். இவற்றின் உணவு மற்ற மீன்கள்தாம் என்றாலும், ஆறுகளில் நீர் குடிக்க இறங்கும் ஆடு, மாடுகள், குதிரைகளையும் விடுவதில்லை. இவை, கூட்டமாகத் திரியும்போது, இவற்றினி டையே ஒரு குதிரை அகப்பட்டுக் கொண்டால் ஒரு சில நிமிடங்களுள் அதன் எலும்புகள்தாம் மீதமிருக்கும்.

- பா.விக்னேசுவரன், குட்டம்

அசாதாரண வளர்ச்சியிலும் ஆபத்து இருக்கிறது. குறிப்பாக மிருகங்கள் விஷயத்தில்கூட! ஒட்டைச் சிவிங்கியின் கழுத்து மிக நீளமானது. அவற்றால் இரும முடியாது. எனவே அடிக்கடி அவற்றுக்கு தொண்டையில் கிருமி தாக்குதல் ஏற்பட்டு, புண் வருகிறது. பாவம்! எவ்வளவு பெரிய கழுத்து. இதில் நோய், கிருமிகள் தாக்கினால், அதை எப்படி சமாளிக்கும்!

- கு.அபிஷேக், உ. எண் : 518,



"கரடி விடறியா?"

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்களுக்கான ஜோக் போட்டியில் ஏராள மாணவர்கள் உற்சாகமாகக் கலந்து கொண்டனர். வந்திருந்த நகைச்சுவைத் துணுக்குகளில் தேர்வு செய்யப்பட்ட இந்த ஐந்து ஜோக்குகளும் தலா ரூ.50/- பரிசு பெறுகின்றன.

கரடி : சைக்கிள்ல 'டபுள்ஸ்' அடிக்கக் கூடாதுன்னு 'ரூல்ஸ்' இருக்கறதா எங்கிட்டேயே கரடி விடறியா? மரியாதையா வண்டியை ஓட்டு.

- ஜீ.வி.நர்மலாதேவி, உ.எண் : 999, திருவண்ணாமலை

"அண்ணே! நான் எப்படி சிரிச்சுகிட்டு போட்டோவுக்கு போஸ் தரேன். நீங்க மட்டும் உம்மணாமூஞ்சியா இருந்தா எப்படி? பயப்படாம சிரிங்கண்ணே!"

- ஆர்.ஸ்ரீவித்யா, உ. எண் : 466, கோவை

"சீக்கிரமா ஒரு ப்யூட்டி பார்லருக்கு வண்டியைத் திருப்பு."

"எதுக்கு?"

"கோகுலம் ஜோக் போட்டிக்காக நம்மை போட்டோ எடுக்க வர்றாங்க. மேக்கப் போட்டுக்கிட்டு அழகா போஸ் கொடுக்க வேண்டாமா."

- அதிபன் அன்புமணி, உறுப்பினர் எண் : 120, ஈரோடு

"என்னது?! டோராவை பார்த்தாத்தான் கீழே இறங்குவியா? ஏன் இப்படி அடம் பிடிக்கிற? டோராவுக்கு நான் எங்க போவேன்?"

- கா.நத்தானியேல் நவீன்ராஜ், உ. எண் : 39, செங்கல்பட்டு

கரடி : ஏன் அவரைப் பார்த்து பயப்படுறீங்க? நான்தான் கெட்டியா பிடிச்சிருக்கேன்ல; அவர் ஒன்னும் செய்யமாட்டார். பயப்படாதீங்க!"

- த. பிரகல்யா, உ. எண் : 318, தஞ்சாவூர்



இந்த டைஜஸ்டில்...

உள்ளே...

"டேய் முட்டாள் ரகு!"

சந்துரு கூப்பிட்டவுடன் அவன் முன்பு போய் நின்றான் ரகு. சந்துரு, ரகுவைவிட ஐந்து வயது இளையவன். என்றாலும், ரகு கோபப்படவில்லை. மற்ற சிறுவர்கள் அனைவரும் சிரித்தனர்.

"நாங்க சொன்னோமில்ல... பாத்தியா இப்ப?"

சந்துரு ஆச்சர்யப்பட்டான். 'அதெப்படி தன்னை முட்டாள் என்று சொல்வதை ஒருவன் விரும்ப முடியும்?' என்ற சந்தேகம் தோன்றியது அவனுக்கு. இதில் ஏதோ காரணம் இருக்கிறது என்று நினைத்தான்.

மறுநாள் முதல் ரகுவைக் கூப்பிடுவான். சாப்பிட ஏதாவது கொடுப்பான். விளையாடுவான். 'போயும் போயும் உனக்கு விளையாட இவன்தான் கிடைத்தானா? நீயும் முட்டாளாயிடாதே' என்று எல்லாரும் அவனை எச்சரித்தனர்.

ஆனாலும், சந்துரு மாறவில்லை. ரகுவுடன் விளையாடுவதைத் தொடர்ந்தான்.

ஒருநாள்...

சந்துரு தன் அப்பாவுடன் கடையில் நின்றுகொண்டிருந்தான். சற்றுத் தொலைவில் ஒருவர் ரகுவை கேலி செய்துகொண்டிருந்தார்.

"ஏய் முட்டாள்... உனக்கு ஒரு ரூபா போதுமா... ஐந்து ரூபாய் வேணுமா?" அவர் கேட்டவுடன் ரகு, 'ஒரு ரூபா' என்றான். அவரும் சிரித்துவிட்டு 'போடா முட்டாள்' என்று சொல்லிவிட்டு ஒரு ரூபாயைக் கொடுத்தார். ரகு அதை வாங்கிக் கொண்டு போனான். சந்துரு அவனை வியப்பாகப் பார்த்தான்.

சற்று நேரத்தில் இன்னொருவர் முன்பு ரகு நிற்பதைக் கவனித்தான். அவர், 'டேய் உனக்கு ஐந்து ரூபாய் வேணுமா? வைர மோதிரம் வேணுமா?' என்றார். ரகு 'ஐந்து ரூபாய்' என்றான். அவரும் சிரித்துவிட்டு அவன் தலையில் தட்டி ஐந்து ரூபாயைக் கொடுத்தார். இதையும் கவனித்தான் சந்துரு.

ரகுவின்

மறுநாள் -



மனமாற்றம்!

ரகுவைப் பார்த்த சந்துரு அதைப் பற்றிக் கேட்டான்:

"ஏன் அப்படிச் செய்தாய்?"

"சந்துரு, அவங்க என்னை முட்டாள்னு சொன்னாலும், அடிக்கடி காசு கொடுத்து கிட்டே இருக்காங்க. எந்த வேலையும் பார்க்காமல் காசு கிடைக்குது. நான் வைர மோதிரத்தை எடுத்துகிட்டு 'முட்டாளில்ல'ன்னு தெரியவெச்சா, அடிக்கடி இப்படி காசு கிடைக்காதே?"

அதைக் கேட்ட சந்துரு பளாரென்று ரகுவை அறைந்தான்.

"நீ முட்டாளாய் இருந்திருந்தால்கூட தவறில்லை. ஆனால் ஏமாற்றுக் காரனாய் இருக்கிறாய். போ இங்கிருந்து"

சந்துருவின் கோபம், ரகுவைச் சுட்டது. அன்று முதல் உழைப்பவனாக மாறிப் போனான் ரகு!



எஸ்.சுப்ரியா.
உறுப்பினர் எண் - 79,
சென்னை



''ஒரு கேள்விக்கு இன்னொரு கேள்வி பதிலாக முடியுமா?''

''ஏன் முடியாது?''

''எனக்கு மனசே உடைந்துவிட்டது டாக்டர்.''

''எது உடைஞ்சா என்ன? சரி பண்ணிடலாம். எக்ஸ்ரே எடுத்து, மாவுக்கட்டுப் போட்டுடலாம்!''

- எம்.அசோக்ராஜா, திருச்சி





நாலு மூளை

''வட்டம், சதுரம். இதுல எது அறிவாளி?''

''தெரியலையே?''

''சதுரம்தான். ஏன்னா அதுக்குத்தான் நாலு மூளை இருக்கே!''

- ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி



"சூடான தோசை கல்லில் எண்ணெய் தடவினா என்னாகும்?"

"உன்னைத் தடவினா, உன் உடம்பு வெந்து போகும்..."

அறிவாளி!

"தலையில அவ்வளவு கொட்டியும் அந்த ஆளுக்கு வலிக்கலையா, ஏன்?"

"... அவருக்கு கொட்டினது 'முடி'யாச்சே."

- தேவிதாசன், சொக்கம்பட்டி





"அப்பா! எங்கக் கணக்கு வாத்தியாருக்கு கணக்கே தெரியலை."

"எப்படிடா சொல்ற..!"

"நேத்து 7 + 3 = 10ன்னு சொன்னாரு. இன்று 5 + 5 = 10ன்னு சொல்கிறார்.

"இன்னிக்கு நம்ம டாக்டர் நாலு உயிர்களைக் காப்பாத்திட்டார்!"

"அப்படியா! எப்படி?"

"இன்னிக்கு நடக்க இருந்த நாலு ஆபரேஷனையும் தள்ளி வச்சிட்டார்."

- ஆர்.மோகன்,
உறுப்பினர் எண் : 536,
கும்மிடிப்பூண்டி





கலை நகரம்!

‘நகரேஷு காஞ்சி’ என்று வடமொழிக் கவிஞர் பாரவி போற்றிய சிறப்புக்குரிய காஞ்சிபுரம்தான் எங்கள் ஊர். மிகப் பழங்காலத்தில் இருந்தே சிறப்புமிக்க நகரமாக விளங்கியிருக்கிறது காஞ்சி!

தமிழக வரலாற்றின் இருண்ட காலம் என்று சொல்லப்பட்ட களப்பிரர் காலத்தை விரட்டி எழுந்த அரசுகள் இரண்டுதான். ஒன்று, மன்னன் கடுங்கோன் தலைமையில் எழுந்த பாண்டிய அரசு; இன்னொன்று



சிம்மவிஷ்ணுவின் தலைமையில் எழுந்த பல்லவ அரசு!

சிம்ம விஷ்ணுவைத் தொடர்ந்து பல்லவ மன்னர்கள் காஞ்சியை தலைநகரமாகக் கொண்டு ஆட்சி புரிந்தனர். மகேந்திர வர்மன், நரசிம்மவர்மன், சிவஸ்கந்தவர்மன்... என்று பல்லவ மன்னர்கள் பலராலும் ஏற்றம் பெற்ற திருநகரம் இது.

கல்வி பயில்வதற்காக நாட்டின் பல பகுதிகளில் இருந்தும் மாணவர்கள் இங்கிருந்த கல்விக் கூடங்களில் தங்கிப் பயின்றனர். நாலந்தாவில் தலைமைப் பொறுப்பில் இருந்த தர்மபாலர் காஞ்சிக் கடிகையில் படித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பௌத்தம், சமணம் சைவம் வைணவம் என்று எல்லாச் சமயங்களும் இங்கே சிறந்து விளங்கின. பிற்பாடு சைவம், வைணவம் மட்டுமே நிலைபெற்றன.

சிற்பக்கலை என்று நினைத்தால் அதன் சிகரமாக விளங்கும் கைலாசநாதர் கோயில் விளங்குவதும் இந்தக் காஞ்சியில்தான். தவிர, வரதராஜப் பெருமாள் கோவில், ஏகாம்பரேஸ்வரர் கோயில், காமாட்சியம்மன் கோயில், குமரகோட்டம்... என்று ஏராளமான திருக்கோயில்கள் இங்கே உள்ளன.

ராமானுஜரை ஆட்கொண்ட வரதராஜப் பெருமாளும், சங்கரர் போற்றிய அன்னை காமாட்சியும் காஞ்சியின் விசேஷ மூர்த்திகள்!

கல்வி, கலை, பக்தி இவைகளுக்கு மட்டுமில்லாமல், பட்டு நெசவுக்கும் பெயர் பெற்று விளங்குவது எங்கள் ஊர். காஞ்சிபுரம் பட்டு தனிச்சிறப்பு வாய்ந்தது. ராமானுஜரின் சீடரான கூரத்தாழ்வான். காஞ்சியை அடுத்துள்ள 'தூப்புல்'லில் அவதரித்த வேதாந்த தேசிகர், பன்னிரு ஆழ்வார்களில் ஒருவரான பொய்கையாழ்வார் அவதரித்து; தமிழகத்தின் முன்னாள் முதல்வரான பேரறிஞர் அண்ணா பிறந்த ஊர்... என்று காஞ்சிபுரத்தின் சிறப்பை சொல்லிக் கொண்டே போகலாம்.

ஏரி மாவட்டம் என்று புகழ்பெற்ற எங்கள் மாவட்டத்தில்தான் புகழ்பெற்ற மலைக்கோவிலான திருக்கழுக்குன்றம், வேடந்தாங்கல் பறவைகள் சரணாலயம் ஆகியவையும் உள்ளன.

- எஸ்.தணிகைவேல்,
உ. எண் : 762, பெரிய
காஞ்சிபுரம்







I. நான், ஆறு எழுத்து ஊர். என் முதலெழுத்து குணத்தில் உண்டு; சினத்தில் இல்லை. இரண்டாம் எழுத்து நம்பிக்கையில் உண்டு; சந்தேகத்தில் இல்லை. மூன்றாம் எழுத்து படத்தில் உண்டு. ஓவியத்தில் இல்லை. நான்காம் எழுத்து வைக்கோலில் உண்டு. பிண்ணாக்கில் இல்லை. ஐந்தாம் எழுத்து மணத்தில் உண்டு. மனத்தில் இல்லை. கடைசி எழுத்தும் இரண்டாம் எழுத்தும் ஒன்றே. என் முதல் மூன்று எழுத்துகள், ஒரு ராசியைக் குறிக்கும். மேலும், நான் வெற்றிலைக்குப் பெயர் போனவன் - நான் யார்?

II. 1. ABC இந்த மூன்று எழுத்துக்கள் வராமல் 100 எண்களை கூற முடியுமா?

2. ABCD நான்கு எழுத்துகள் இல்லாத 100 எண்கள்?

3. ABD மூன்று எழுத்துகள் இல்லாத 100 எண்கள்?

- எஸ்.செல்வகுமார்,
அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி,
பெத்த நாயக்கன் பாளையம், சேலம்



III. (a) விடுபட்ட வார்த்தையைக் கண்டுபிடி

CROSS (SORE) RENTS
MAKES (?) INLET

(b)
SMITH (TIDE) BREAD
GROSS (?) GROWL

IV. (a) ஒன்றிலிருந்து நூறு வரை எண்களை எழுதும் போது ஐந்து என்ற எண்ணை எவ்வளவு முறை எழுத வேண்டியிருக்கும்.

(b) இரண்டு எண்களை கூட்டினால் 28 வரும். கழித்தால் 4 வரும். அந்த இரு எண்கள் எவை?

(c) ஒரு எண்ணை அதே எண்ணால் பெருக்கினால் வரும் தொகை ஐந்து டஜனை விட நான்கு கூடுதலாக இருக்கும். அந்த எண் எது?

- பி.சர்வேஸ்வரன்,
உ. எண் : 456, மதுரை


V. விடுபட்ட எண்ணை நிரப்புங்கள்

நான்


16	(27)	43
29	(?)	56


கேள்விக்குறி உள்ள இடத்தில் வர வேண்டிய எண் என்ன? கவனித்துப் பாருங்கள்.

VI. (a) விடுபட்ட எண்ணை நிரப்புங்கள்



(b)





- கி.பாலாஜி, உ. எண் : 657, மயிலாடுதுறை

யார்?

VII. ஒரே வாக்கியத்தில் A, B, C, D... Z வரை உள்ள 26 எழுத்துக்களும் வர வேண்டும். அந்த மாதிரி வாக்கியம் அமைக்க முடியுமா? முயன்று பாருங்கள்.

- ஆர்.மதுமதி, மதுரை



VIII. கீழே உள்ள படி 1 முதல் 36 முடிய 36 கட்டங்களைப் போட்டுக் கொண்டு ஒரு எண்ணை ஒரு முறை உபயோகப் படுத்தி மேலிருந்து கீழாக கூட்டுத் தொகை 222 கொண்டு வர முயலுங்கள்.



222	222	222

விடைகள் 56ம் பக்கம்

இளவரசி சந்திரமதி

கதை: கோடவிளை.த.அருள்　　　படம்: பிள்ளை




ம்... அதை கூண்டில் வைத்து, விரும்போதெல் லாம் பாடச் சொல்லி கேட்பேன்.
மிகவும் வேடிக்கையான ஆசை உன்னுடையது.
மன்னரின் கேலியை அறியாதமாதிரி...
அப்படியென்னப்பா வேடிக்கை இதில்?
கூண்டில் சிக்கிய குயில் சந்தோஷமாகப் பாடுமா அம்மா?
ம், பாடும். நான் அதற்கு தானியங்கள், பழங்கள் எல்லாம் கொடுத்து நன்றாகப் பார்த்துக் கொள்வேன்.
இருந்தாலும், சிறைப்பட்ட குயில் சந்தோஷமாகப் பாடாது. சொன்னால் கேள்.
அது சிறையல்ல... ஆபத்து வரக்கூடாது என்று வைத்துள்ள கூண்டு.
இருந்தாலும் சுதந்திரம் இல்லைதானே? அப்புறம் ஏது மகிழ்ச்சி?!
அப்படியானால் நம் மக்களும் சந்தோஷமாக இல்லை என்பதை உணர்ந்திருக்கிறீர்களா அப்பா?
மகளே! நீ என்ன சொல்கிறாய்?
குயிலின்மீது உள்ள கரிசனம், நம் குடிமக்கள் மேலும் இருக்க வேண்டாமா? உங்கள் கோபம் நியாயமா?
நீ சொல்வது புரிகிறது மகளே... இனி இப்படி இருக்கமாட்டேன்.
மறுநாள்...
இந்த ஆண்டுக்கான வரி தள்ளுபடியாகிறது. சிறைப்பட்டவர்கள் விடுதலையாவார்கள்.
மன்னர் சித்திரசேனர் வாழ்க! இளவரசி சந்திமதி வாழ்க!

''திங்கட் கிழமை வரும்போது எல்லோரும் அவங்கவங்க வரைந்த ஓவியத்தைக் காட்டணும்' ஆசிரியர் சொல்லும்போதே, பள்ளியின் மணி ஒலித்தது. மாணவர்கள் சரசரவென்று கிளம்பினார்கள்.

''ராமு, மறந்திடாதே, திங்கட்கிழமை டிராயிங் காட்டணும்.''

சோமு சொன்னவுடன், 'ம்... திங்கட்கிழமைதானே, நாளைக்கு லீவு இருக்கு. வரைஞ்சுக்கலாம்' என்று சொல்லி ஓடினான் ராமு.

இருவரும் நண்பர்கள்தான். என்றாலும், ராமுவிடம் சோம்பேறித்தனமும், பொறாமையும் அதிகம்.

மறுநாள் முழுவதும் டீ.வி. பார்ப்பதிலேயே கழித்த ராமு, பொழுது விடிந்த பிறகுதான் நினைத்தான்: 'ஆ... படம் வரையவில்லையே? என்ன செய்வது?' யோசனையுடன் பள்ளிக்கு வந்தான்.

சொன்னது போலவே, நான்காவது பீரியடில் வந்த ஓவிய ஆசிரியர் கேட்டார். மாணவர்கள் ஒவ்வொருவராக வந்து தாங்கள் வரைந்த ஓவியத்தைக் காட்டினார்கள். அந்த ஓவியத்தை



நட்பின் வண்ணம்!

உயர்த்திக் காட்டி, அதில் செய்ய வேண்டிய திருத்தங்களையும் எடுத்துச் சொல்லி ஒவ்வொருவரையும் பாராட்டினார் ஆசிரியர்.

அடுத்து சோமு செல்ல வேண்டும். அந்த நேரத்தில் தலைமை ஆசிரியர் அழைக்கவே ஓவிய ஆசிரியர் எழுந்து சென்றார். சோமுவும் எழுந்து முதல் பெஞ்சில் இருந்த மாணவனிடம் எதற்காகவோ எழுந்து போனான்.

அந்த நேரத்தில், சோமுவின் பையைப் பிரித்தான் ராமு. அதில் அழகாக வரையப்பட்டிருந்தது ஒரு ஓவியம். 'ஆ... இவன் எவ்வளவு அழகாக வரைந்திருக்கிறான். நான் எதுவுமே வரையவில்லையே.



இவன் ஓவியத்தை கெடுத்துவிட்டால், நம்மையும் ஆசிரியர் திட்டமாட்டார்' என்று குறுக்கு யோசனை ஓடியது அவனுக்கு.

உடனே, தன்னுடைய பேனாவைத் திறந்து மையை அந்த ஓவியத்தின் மேல் சிதறலாய் ஊற்றினான். மீண்டும் அதை சோமுவின் பைக்குள் வைத்துவிட்டு, எதுவும் தெரியாததுபோல் அமர்ந்து கொண்டான். சற்று நேரத்தில் ஓவிய ஆசிரியர் வருவதைக் கவனித்த சோமு, தன் இடத்துக்கு வந்தான்.

தன்னுடைய பையைத் திறந்து, ஓவியத்தை எடுத்துச் சென்றான். ஆசிரியர் அதைப் பாராட்டிப் பேசினார். ராமு திகைத்துப் போனான். 'நான் இங்க் ஊற்றிய படமில்லையே வேறல்லவா இது!'' என்று குழம்பினான்.

மீண்டும் தன் இடத்தில் வந்து அமர்ந்த சோமு, 'கவலைப்படாதே ராமு. உனக்காகவும் ஒரு படம் வரைந்து வந்திருக்கிறேன். நீ வரையவில்லைதானே?' என்றபடியே, புத்தகப் பையின் அடுத்த ஜிப்பைத் திறந்து எழுந்தான். அது, ராமு இங்க் கொட்டிய ஓவியம்!

அதைப் பார்த்த சோமுவின் கண்கள் மட்டுமல்ல; ராமுவின் கண்களும் கண்ணீர் சிந்தின.

''ஆ... நான் சோமுவுக்கு தீங்கு நினைத்தேன். அதனால், எனக்கு அவன் செய்த நன்மையை கெடுத்துக் கொண்டேன். என் பொறாமையால் உண்டான துன்பம் இது!'' என்று உணர்ந்து வருந்தினான்.

அன்றோடு, பொறாமை அவனை விட்டு ஓடிப்போனது!

• ப.செல்வ சுவேதா,
சைதன்ய மெட்ரிக் பள்ளி,
சேலம்.



எஸ்.வனிதா,
ஒன்பதாம் வகுப்பு,
கெம்பன்னா அரசு மகளிர்
மேல்நிலைப் பள்ளி, புளியம்பட்டி



த.மௌரியா,
ஒன்பதாம் வகுப்பு,
கீர்த்திமான் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
கோவை

உங்கள்

எம்.ஜீவா,
ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி



எஸ்.ஏ.சாய்னி,
எட்டாம் வகுப்பு, எஸ்.பி.கே. மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு






ஆர்.முரளிதரன்,
உ. எண் : 928, ஜோதிவித்யாலயா
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சேலம்

ச.காயத்ரி,
உ. எண் : 744, ஒன்பதாம்
வகுப்பு, அரசு உயர்நிலைப்
பள்ளி, சத்தியமங்கலம்



கைவண்ணம்!

ஜே.பி.பாரதி,
எட்டாம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி





ஜீ.பிரவீன்குமார்,
ஒன்பதாம் வகுப்பு,
பிஷப் ஹீபர் மேல்நிலைப் பள்ளி,
திருச்சி

கோல்டன் ஈகிள் எனப்படும் மிகப் பெரிய ராட்சஸக் கழுகுகள் ஸ்காட்லாந்து மற்றும் அயர்லாந்து ஆகிய நாடுகளில் காணப்படுபவை. ஒரு ஆட்டுக்குட்டியை தூக்கிச் சென்று உணவாக்கிக் கொள்ளும் வலிமையும், ஆற்றலும் கொண்டவை இந்த வகைக் கழுகுகள்!

முழு வளர்ச்சியடைந்த இந்த வகைக் கழுகு தன் சிறகை விரித்தால் சுமார் ஆறு அடி நீளம் இருக்கும். போர் விமானங் களைப் போல வேகமாக சரேலென்று மேலேறுவதும், கீழிறங்குவதும் இந்தக் கழுகின் தனிச் சிறப்பு.

இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இந்தக் கழுகுகளின் இனம் கிட்டத்தட்ட அழியும் நிலையை எட்டிவிட்டது. உணவுக்காக இதன் முட்டைகளை கவர்ந்ததும், வேட்டையாடப்பட்டதும் இதற்கான முக்கியக் காரணங்களாக அமைந்தன. அழியும் தருவாயில் இருந்த இந்தக் கழுகு இனத்தைக் காக்க வேண்டும் என்று இயற்கைச் சூழல் ஆர்வலர்கள்



முயற்சி மேற்கொண்டனர்.

இந்த நிலையில் ஸ்காட்லாந்தில் இருந்து அயர்லாந்துக்கு இடம் பெயர்ந்தது ஒரு கழுகு ஜோடி. அதைத் தொடர்ந்து ஸ்காட்லாந்தில் இருந்து வடக்கு அயர்லாந்துக்கு வளர்ந்த கழுகுகள் கொண்டு





நூற்றாண்டின் முதல் கழுகு!



வரப்பட்டன.

அப்படி வந்த கழுகுகளில் ஒன்று தற்போது முட்டைகளை இட்டுள்ளது. அதில் வெளிவந்த இரண்டு குஞ்சுகளில் ஒன்று ஐந்து நாட்களிலேயே இறந்துவிட்டது. இன்னொன்று தப்பிப் பிழைத்து, ஆறு வாரங்களைக் கடந்து விட்டது.

இந்த கழுகு குஞ்சுக்கு அப்படி யென்ன சிறப்பு என்றுதானே நினைக்கிறீர்கள். கடந்த நூறு வருடங்களில் பிறக்கும் முதல் கோல்டன் ஈகிள் என்பதுதான்! அயர்லாந்து குடியரசு இந்தக் கழுகுக் குஞ்சை பொத்திப் பொத்தி வளர்க்கிறதாம்!

- சு.தாணு,
உ. எண் : 286,
சாகுபுரம்



* மலைக் குகை



இங்குள்ள படத்துக்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்

வண்ணம் தீட்டுங்கள்!

ஆசிரியர் நல்லதம்பி ஆழ்ந்த சிந்தனையில் இருந்தார்.

''பையன்கள் நல்ல குணம் கொண்ட வர்கள்தான். ஆனால், கவனம் இல்லாமல் இருக்கிறார்களே. இவர்களை எப்படி வழிப்படுத்துவது?''

அந்த சிந்தனைக்குக் காரணமான மூவரும் அவரது வகுப்பு மாணவர்கள் தான்.

அவர்களில், காதர் படிப்பில் கெட்டிக் காரன். படிப்பு என்றால், பாடப் புத்தகங் களில் எந்தக் கேள்வியைக் கேட்டாலும் பளிச்சென்று பதில் சொல்வான். பள்ளி யின் சிறந்த மாணவன்.

முருகன் விளையாட்டில் கெட்டிக் காரன். நீச்சல், ரன்னிங், வாலி பால் என்று ஆண்டு தோறும் கோப்பைகளைக் குவிப்பவன். ஆனால், படிப்பில் மிகவும் சுமார் தான்.

அறுசுவை தந்த

அருணிடம் பொது அறிவுச் செய்தி கள் அதிகம். ஆனால், படிப்பிலும் சரி; விளையாட்டிலும் சரி சுமார்தான். ஆனால், பொது அறிவுப் போட்டி களில் கோப்பை பெறுபவன்.

மூவருமே ஒழுக்கத்தில் சிறந்தவர்கள்; அடக்கமானவர் கள். நெருங்கிய நண்பர்களும் கூட இவர்களைத் திருத்துவது எப்படி என்றுதான் சிந்தித்துக் கொண்டிருந்தார் ஆசிரியர். அப்போதுதான் அவருக்கு அந்த யோசனை வந்தது.

மறுநாள் -

''காதர், முருகன், அருண் உங்க மூணு பேருக்கும் நாளைக்கு மதியம் என் வீட்டில் விருந்து. காரணம், நீங்க மூணு பேருமே மாவட்ட அளவுல ஜெயிச் சிருக்கீங்க.''

ஆசிரியர் சொன்னதும் மாணவர்கள் கரவொலி எழுப்பினார்கள். நண்பர்கள் மூவரும் உற்சாகமாயினர்.

அடுத்த நாள் மதியம் -

வீட்டுக்குள் நுழைந்த அவர்கள் மூவரையும் தன் மனைவிக்கு அறி முகப்படுத்திய ஆசிரியர், சாப்பிட அமர்த்தினார்.

சாப்பிட அமர்ந்த அவர்கள் மூவரும் குழம்பிப்போயினர். காரணம், காதருக்கு



பாயசமும் அப்பளமும் வைக்கப்பட்டிருந்தன. முருகனுக்கு சாதமும் வடையும் வைக்கப்பட்டிருந்தன. அருணுக்கு தயிரும், சாம்பாரும் வைக்கப்பட்டிருந்தன.

நிமிர்ந்து ஆசிரியரைப் பார்த்தனர்.

அதைப் புரிந்து கொண்ட ஆசிரியர் பேசினார்:

"நீங்கள் மூவருமே திறமையானவர்கள்தான். ஆனால், ஒன்று மட்டுமே போதாது. ஒரு துறையில் ஆழ்ந்த திறமையும், பிற விஷயங்களில் தேர்ச்சியும் அவசியம். படிப்பு, பொது அறிவு, விளையாட்டு - இவை சரிவர உங்களால் பயன்படுத்தப்பட வேண்டும். அப்போது தான் வெற்றி முழுமையானதாக இருக்கும்.

இல்லையென்றால், இப்போது உங்கள் முன் வைக்கப்பட்டுள்ள உணவு மாதிரியே, வெற்றியும் முழுமையானதாக இருக்காது."

ஆசிரியர் சொன்ன கருத்து மூவருக்குமே தெளிவாகப் புரிந்தது.

"இனிமே எல்லாத்துலயும் கவனமா இருப்போம் சார்" என்றனர் மூவரும்.

"சரி; நிஜமாகவே சாப்பிடலாமா?"

சிரித்தபடியே அமர்ந்தார் ஆசிரியர் நல்லதம்பி. அவர் மனைவி உணவைப் பரிமாற ஆரம்பித்தாள். ●

அறிவுரை!



மு.அருண்குமார்.
உறுப்பினர் எண்-670.
ஓசூர்.

* சிலந்தி ஒரே சமயத்தில் 600 முட்டைகள் இடும்.
* மணல் கோழியின் முட்டை சிலிண்டர் வடிவில் இருக்கும்.
* கிளி ஆண்டுக்கு ஒரு முட்டையிடும்.
* காட்டு வாத்துக்கள் கறுப்பாய் முட்டையிடும்.
* கரப்பான் பூச்சி 16 முட்டைகள் இடும்.
* பறவைகளின் முட்டையைப் பற்றி படிக்கும் படிப்புக்கு ஓவாலஜி என்பது பெயராகும்.
* முட்டையிட்டுக் குஞ்சு பொறிக்கும் உயிரினம் கடற்குதிரை ஆகும்.
* படிகாரத்தின் வேதியியல் பெயர் இரட்டை சல்ஃபேட் ஆகும்.
* உலகிலேயே மிகவும் கடினமான பொருள் வைரம்.



* ஒளி புகாத கண்ணாடி ஊடகம் செராமிக் கண்ணாடி.
* புயலின் மொத்த சக்தி 1000 அணுகுண்டுக்குச் சமமானது.

கறுப்பு





முட்டை!

✱ உலோகங்களில் மிக உயர்ந்ததாகக் கருதப்படுவது புளூட்டோனியம்.

- ஏ.எஸ்.யோகானந்தம், கோபி

✱ உலகிலேயே யானைகள் அதிகமாக வாழும் கண்டம் ஆப்பிரிக்கா.

✱ கண்களிலிருந்தும் பார்வை இல்லாத பிராணி வவ்வால்.

✱ நவீன இந்தியாவின் தந்தை என்றழைக்கப்படுபவர் இராஜாராம் மோகன்ராய்.

✱ நிறமற்ற இரத்தம் கொண்ட பூச்சி, கரப்பான் பூச்சி ஆகும்.

✱ மிகவும் அதிகமான ஓசையை வெளியிடும் உயிரி, நீலத்திமிங்கலம் ஆகும்.

✱ கடல் நீரில், 78 சதவீதம் உப்பு உள்ளது.

✱ பாலிலுள்ள கொழுப்புச் சத்து குளிர்காலத்தில் குறையும்.

✱ நம் உடலில் மொத்தம் 30 லட்சம் வியர்வைச் சுரப்பிகள் உள்ளன.

✱ மூளையை உடலிலிருந்து எடுத்த பின்னரும் உயிர் வாழும் ஒரே விலங்கு ஆமை.

✱ மின்மினிப் பூச்சியின் ஒளிரும் தன்மைக்குக் காரணமான வேதிப்பொருள் லூசிபெரின்.

✱ மனிதத் தலை 22 எலும்புகளால் ஆனது.

- பா.விக்னேசுவரன், குட்டம்

✱ ஒரு ஹெலிகாப்டர் அதிகபட்சம் மணிக்கு 400 கிலோ மீட்டர் வேகமாக பயணிக்கும்.

✱ தென்னை மரங்களில் 2600 வகைகள் உள்ளன.

✱ முட்டை ஓட்டின் எடை 2 கிராம்.


✱ வெயில் 150 டிகிரிக்கும் மேலாக அடித்தால்தான் ஒட்டகத்திற்கு வியர்க்கும்.

- ப.கோபிபச்சமுத்து, கிருஷ்ணகிரி









பா.சௌந்தர்யா,
உறுப்பினர் எண் : 229,
கிளேஸ்புருக் மெட்ரிக் பள்ளி,
சேலம்

வி.ஹரிஹரன்,
ஸ்ரீ ரமணா வித்யாலயா,
ராஜபாளையம்

சுட்டீஸ் கைவண்ணம்!

எஸ்.பி.தீபலக்ஷ்மி,
மூன்றாம் வகுப்பு,
உ. எண் : 714,
எஸ்.எஸ்.கே.வி.
மெட்ரிகுலேஷன் பள்ளி,
காஞ்சிபுரம்



என்.சந்தியா,
நான்காம் வகுப்பு,
சாரதா மெட்ரிக் பள்ளி,
செஞ்சி





ஜே. ஸ்ரீலக்ஷ்மி,
ஸ்ரீ ரமணா வித்யாலயா,
ராஜபாளையம்





வித்தியாசங்களைக் கண்டுபிடி!

இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.



தண்ணீரில்

I. 1. மஞ்சள் நிறத்தவள்; மண்ணுக்குள் புதைந்தவள்; மங்கயரை கவர்ந்தவள்; அவள் யார்?

2. கிளம்பும் இடம் தெரியும்; மறையும் இடம் தெரியாது - அது எது?

3. தண்ணீர் இல்லாமல் வளரும், தரையில்லாமல் படரும் - அது என்ன?

4. இவன் அழுதால்தான் உலகம் சிரிக்கும் - அவன் யார்?

5. காய்த்தும் பழுக்காத மரம் - அது என்ன?

6. கண்ணால் பார்க்கலாம், கையால் பிடிக்க முடியாது - அது என்ன?

- உ.சுல்த்தானா, இராமநாதபுரம்

II. 1.ஒரு பக்கம் கறுப்பு; மறுபக்கம் சிவப்பு; உள்ளே வெள்ளை பருப்பு - அது என்ன?



2. தண்டு இல்லாத வட்ட வட்ட இலை - அது என்ன?

3. வெள்ளிக்குண்டு; வெண்கலக் குண்டு; தண்ணீரில் போட்டால் மிதக்கும் குண்டு : அது என்ன?

4. சிரிக்காமல் கிடப்பாள் காட்டுக்குள்; சிரித்த பின் வருவாள் வீட்டுக்குள் - அவள் யார்?

5.கொளுத்திய பின் கோடிக் கும்பிடு - அது என்ன?

6. அடித்தால் அழும்; பிட்டால் சிரிக்கும் - அது என்ன?

7. பாங்காய் இருப்பாள்; பட்டென்று போவாள் - அது என்ன?

- ஆர்.மதுமதி, மதுரை

III. 1. தலையை வெட்ட வெட்ட கறுப்பாய் நாக்கை நீட்டும் - அது என்ன?

2. ஓட ஓட வால் குறைகிறது - அது என்ன?

3. ராத்திரியில் பிறந்த பையன் தலைப்பாவுடன் பிறந்தான் - அவன் யார்?

4. பிறக்கும்போது சுருண்டிருக்கும்; பிறந்த பின் பிரிந்து இருக்கும் - அது என்ன?

- ஆர்.மோகன், உறுப்பினர் எண் : 536, கும்மிடிப்பூண்டி



IV. 1. அறைகள் அறுநூறு; அத்தனையும் ஒரே அளவு - அது என்ன?

2. வேரில்லை முளைத்திருக்கு; இலையில்லை கிளையிருக்கு - அது என்ன?

மிதக்கும் குண்டு?

3. ஒலி கொடுத்து அழைப்பான்; உரையாடலில் திளைப்பான் - அவன் யார்?

4. கடையிலே விற்கிற சாமான்களில் அத்தை ஒன்று, ஆணி ஒன்று - அது என்ன?

5. கருத்திருக்கும் அரங்கமதில் வெண் பருந்து விளையாடும் - அது என்ன?

6. காய்க்கும்; பூக்கும்; சலசலக்கும் காக்காய் உட்கார இடமில்லை - அது என்ன?

- ஆர்.அம்பிகா, மதுரை



V. 1. உருவம் இல்லாதவன் கத்துவான்; ஓடுவான்; தலைகீழாகக் கவிழ்வான் - அவன் யார்?

2. அவனிடம் ஆறாயிரம் முடிச்சுகளும் உண்டு; ஆயிரம் ஓட்டைகளும் உண்டு - அவன் யார்?


3. நன்றாகச் சுமை தாங்கும்; நன்றாக உதை உதைக்கும் - அது என்ன?

4. ஒற்றைக் கால் நாராயணன் ஓடையில் மீன் பிடிக்கிறான்.


5. எங்கள் வீட்டுத் தோட்டத்தில் மஞ்சள் யானை நிற்கும் - அது என்ன?

- பி.சர்வேஸ்வரன், உ. எண் : 456, மதுரை

விடைகள் 56ம் பக்கம்



நரி நாகு!
முயல் முத்துவை துரத்திய நாகு...
... கிணற்றில் விழுந்தது.
ஓடிக் கொண்டிருந்த முயல்...
என்ன ஒளிஞ்சு கிட்டானா?
நரியின் குரலைக் கேட்டு கிணற்றில் எட்டிப் பார்க்க...
முத்து, என்னைக் காப் பாத்து. சத்தியமான உன்னை ஒண் ணும் பண்ண மாட்டேன்.
மரத்தில் கயிறைக் கட்டி கிணற்றில்விட்டது முயல். அதைப் பிடித்து ஏறியது நாகு.
என்னைக் காப்பாத்திட்டே ரொம்ப நன்றி.
நல்லவனா இரு. போதும்.


கண்டிப்பா. இனிமே நானும் சைவம்தான்!
வெரிகுட்!
சில நாட்களுக்குப் பிறகு...
சே... சைவம் போர்! இன்னிக்கு முத்து விருந்துதான்!
நரி திடீரென்று பாய...
அடப் பாவி!
மாறினதா சொன்னது பொய்யா?
தப்பிய முத்துவை துரத்தியது நரி...
மரத்திலிருந்து விழுந்த மலைப்பாம்பு நரியை வளைத்தது...
கிணற்றில் பிழைத்தாய்; பாம்பிடம் சிக்கினாயே...
ஆ..... ஏமாற்ற நினைத்து மாட்டிக் கொண் டோம்.



ஃபாஸிலைசேஷன்

டினோசர்களின் எலும்புகள் மண்ணோடு மட்கிப் போகாமல் இவ்வளவு காலம் சென்றும் அப்படியே இருப்பதற்குக் காரணம் ஃபாஸிலைஸேஷன் என்னும் விளைவுதான். பாஸில் என்பது புராதன காலத்து ஜந்துவோ, தாவரமோ, எலும்போ இயற்கையாகக் கற்பாளங்களின் இடையில் மாட்டிக் கொண்டு அப்படியே அழியாமல் இருப்பது. படிந்த ஃபாஸிலை வைத்துக்கொண்டு பாறையின் வயதைக் கண்டு பிடிப்பார்கள்.

- பிரகதீஷ் சுப்ரமணியன்,
காரைக்கால்.

Vote எப்படி வந்தது?

தேர்தலில் வாக்கு அளிக்கிறோம். இதனை ஆங்கிலத்தில் vote என்பர். இந்த vote என்ற சொல் எப்படி உருவாயிற்று?

'vote' என்ற சொல் 'Voice of Taxpayers Everywhere' என்பதன் சுருக்கம் ஆகும். அதாவது 'வரி செலுத்துவோரின் குரல்' என்று பொருள் தரும்.

காலப்போக்கில் எல்லோருக்கும் வாக்களிக்கும் உரிமை வழங்கப்பட்டதால் வரி செலுத்தாதவர் அளிக்கும் வாக்கும் vote என்றே

கலர் கலரா


தாவரங்கள் இனப்பெருக்கம் செய்ய மகரந்தச்சேர்க்கை அவசியம். இந்த மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் தேனீக்கள், வண்ணத்துப் பூச்சிகள், வண்டினங்கள் போன்றனவற்றைக் கவர்ந்திழுக்கும் பொருட்டு. இயற்கை அழகிய பிரகாசமான



காற்றைப் பார்க்க முடியாதது ஏன்?

காற்றில் ஆக்ஸிஜன் நைட்ரஜன் உள்ளிட்ட பல்வேறு வகை தனிமங்கள் சேர்ந்துள்ளன. காற்றிலுள்ள நுண்ணிய மூலக்கூறுகள் ஒன்றோடொன்று இணையாமல் தனித்தனியே இருப்பதால் ஒளி அதன் மூலம் எளிதாகப் பாய்கிறது. இதனால் காற்றை நம்மால் பார்க்க முடிவதில்லை. எனினும் காற்று நம் மீது படும்போது அதை உணர முடியும்.

- பா.ராஜபாண்டி, உ.எண்: 674




குறிப்பிடப்படுகின்றது.

- ந.பிருந்தா, ஆறாம் வகுப்பு,
ராஜ்மெட்ரிக் மே.நி. பள்ளி, மயிலாடுதுறை.



பூப்பது ஏன்?

வண்ணங்களை பூக்களுக்கு அளித்திருக்கிறது.



உடல் நடுங்குவது ஏன்?

நமது உடலின் வெப்பநிலை 98.4 °பாரன்ஹீட். இதற்குக் குறைந்தால் நமது உடல் நடுங்குகிறது. நமது தசைகள் வேகமாகச் சுருங்கி விரிவதால் உடல் நடுங்குகிறது. வேகமாகச்சுருங்கி விரிந்தால் உராய்வு ஏற்பட்டு வெப்பம் உண்டாகும். எனவே குறைந்த வெப்பத்தை ஈடுகட்டுவதற்காகவே உடல் நடுக்கம் ஏற்படுகிறது. நமது உடல் நடுங்கும் போது உடலில் உள்ள வெப்பம் வெளியேறாமல் இருக்க கம்பளி ஆடைகளைப் போர்த்தலாம்.

- ம.விவேக், குட்டம்

புதிர்கள் :


I. கும்பகோணம்

II. 1. One, Two, Three .... வரிசையாக Hundred வரை.

2. Zero, One, Two... வரிசையாக Ninety Nine வரை

3. One, Two........ வரிசையாக Ninety Nine, Centum வரை.

III. (a) இடது பக்க ஐந்தாவது எழுத்து S
இடது பக்க மூன்றாவது எழுத்து O
வலது பக்க முதலெழுத்து R
வலது பக்க இரண்டாவது எழுத்து E
அதேபோல விடுபட்ட வார்த்தை SKIN.



சரியான்னு பாருங்க!

(b). இடது பக்க நான்காவது எழுத்து T
இடது பக்க மூன்றாவது எழுத்து I
வலது பக்க ஐந்தாவது எழுத்து D
வலது பக்க மூன்றாவது எழுத்து E
அதேபோல விடுபட்ட வார்த்தை SOLO

IV. (a) 20 முறை **(b)** 16, 12 **(c)** 8

V. 27

VI. (a) விடுபட்ட எண் **54**

(b) விடுபட்ட எண் 11 (ஜன்னலைக் கூட்டி (12+15) கூடவைக் கழித்தால் (16) வரும் எண்தான் விடை

VII. The quick fly fox jumps over the lazy brown dog

VIII.

ஐந்து வித்தியாசங்கள்

1. குருவியின் கொண்டை
2. பறவையின் வால்
3. கிளையில் தளிர்
4. பூ
5. குட்டிக் குருவி

4	9	2
3	5	7
8	1	6
13	18	11
12	14	16
17	10	15
22	27	20
21	23	25
26	19	24
31	36	29
30	32	34
35	28	33
222	222	222

விடுகதைகள்

I. 1.தங்கம், 2.புகை, 3.தலை முடி, 4.வானம், 5.இலவமரம், 6.நிழல்

II. 1.குன்றிமணி, 2.அப்பளம், 3.வெண்ணெய், 4.பருத்தி, 5.கற்பூரம், 6.தேங்காய், 7.பானை

III. 1.பென்சில், 2.ஊசி நூல், 3.காளான், 4.வாழையிலை

IV. 1.தேன்கூடு, 2.மான்கொம்பு, 3.தொலைபேசி, 4.சிற்றரத்தை, சாம்பிராணி, 5.கரும்பலகை, சாக்பீஸ், 6.நெல்கதிர்


V. 1.நீர்வீழ்ச்சி, 2.கயிற்றுக்கட்டில், 3.கழுதை, 4.கொக்கு, 5.வைக்கோல் போர்

கோகுலம் சிறுவர் சங்கம்

பட்டியல்


இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1051. ம.பாண்டி பிரியா, 6ஆம் வகுப்பு, மரியன் சீனியர் செகண்டரி பள்ளி கோட்டயம்
1052. வி.புவனேஷ், முதல் வகுப்பு, ஸ்ரீ கலைமகள் வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி, கும்மிடிப்பூண்டி
1053. கா.மதுரவல்லி, ஐந்தாம் வகுப்பு, பி.எஸ்.பி.பி. மில்லேனியம் பள்ளி, சென்னை
1054. டி.பிரகாஷ், ஒன்பதாம் வகுப்பு, வைரவிழா மேல்நிலைப் பள்ளி, கோபி
1055. ஆர்.சப்ரீதா, இரண்டாம் வகுப்பு, காமராஜ் பதின்ம மே.நி. பள்ளி, கோவில்பட்டி
1056. எஸ். கார்த்திக்ரர்ஜா, ஆறாம் வகுப்பு, செட்டிநாடு ராஜா முத்தையா உ.நி. பள்ளி, கரூர்
1057. யோ.சந்தோஷ், எட்டாம் வகுப்பு, ஜோதி உயர்நிலைப்பள்ளி, குடியாத்தம்
1058. பி.தர்ஷினி, புனித ஜோசப் மெட்ரிக் பள்ளி, சென்னை
1059. ஏ.கே.கௌரிசங்கர், தி நியூ லைட் மெட்ரிக் பள்ளி, திருவிடைமருதூர்
1060. நீ. தமிழ்ச் செல்வி, ஒன்பதாம் வகுப்பு, நாகப்பா மருதப்பா பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருப்பத்தூர்
1061. நீ. லாவண்யா, நான்காம் வகுப்பு, ஆர்.சி.பாத்திமா ந.நி. பள்ளி, திருப்பத்தூர்
1062. கே.பவித்ரன், ஒன்பதாம் வகுப்பு, பாரதிதாசன் மெட்ரிக் மே.நி. பள்ளி, காஞ்சிபுரம்
1063. எஸ்.சக்தி நந்தினி, ஒன்பதாம் வகுப்பு, எஸ்.வி.எஸ். பள்ளி, காஞ்சிபுரம்
1064. பி.முத்தின்ஸ், முதல் வகுப்பு, சம்பக் பள்ளி, மதுரை
1065. வி.உமாதேவி, ஸ்ரீஜெயேந்திர சுவாமிகள் மெட்ரிக் மே.நி. பள்ளி, ஸ்ரீவைகுண்டம்
1066. சி.இரத்தின்ஸ், மூன்றாம் வகுப்பு, சச்சிதானந்த ஜோதி நிகேதன் மழலையர் பள்ளி, கல்லார்
1067. மா.கோவர்த்தினி, எட்டாம் வகுப்பு, மாருதி மேல்நிலைப் பள்ளி, கும்மிடிப்பூண்டி
1068. சி.கோகுல், நான்காம் வகுப்பு, பிரின்ஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1069. பா.அன்னபூரணி, ஒன்பதாம் வகுப்பு, மாருதி மே.நி. பள்ளி, சின்னசேலம்
1070. வே.பவானி சங்கர், ஐந்தாம் வகுப்பு, தி நியூலைட் மெட்ரிக் பள்ளி, திருவிடைமருதூர்
1071. என்.டி.லக்ஷ்மி நரசு, ஒன்பதாம் வகுப்பு, விகாஸ் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருப்பூர்
1072. எஸ்.வைகுந்தன், ஏழாம் வகுப்பு, ஸ்ரீ கன்னிகாபரமேஸ்வரி மேல்நிலைப் பள்ளி, உடுமலைப் பேட்டை
1073. எஸ்.முகுந்தகுமார், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, உடுமலைப்பேட்டை





1074. ப.சண்முகப்ரியா, ஐந்தாம் வகுப்பு, நகராட்சி கூட்டுறவு அர்பன் பாங்க் தொடக்கப்பள்ளி, மன்னார்குடி
1075. மு.நந்தகுமார், எட்டாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வெட்டையம்பாளையம்
1076. ரா.சங்கரநாராயணன், மூன்றாம் வகுப்பு, ஜி.கே.ஷெட்டி விவேகானந்த வத்யாலயா, அம்பத்தூர்
1077. ஜா.ஆரோக்கிய மோனிகா, பத்தாம் வகுப்பு, மாண்ட்போர்டு பள்ளி, திருச்சி
1078. அ.அம்சவள்ளி, ஆறாம் வகுப்பு, அரசு மகளிர் உயர்நிலைப் பள்ளி, ரிஷிவந்தியம்
1079. ஆர்.தினேஷ்குமார், எட்டாம் வகுப்பு, காமராஜ் மேல்நிலைப் பள்ளி, நம்பியூர்
1080. பா.பவானி, ஐந்தாம் வகுப்பு, சாரதா வித்யாலயா, சின்ன சேலம்
1081. மு.காமேஸ்வரன், ஐந்தாம் வகுப்பு, லதாங்கி வித்யா மந்திர், பொள்ளாச்சி
1082. கோ.சசி, ஒன்பதாம் வகுப்பு, கே.ஏ.எம்.பி. மீரானியா மேல்நிலைப் பள்ளி, களக்காடு



1083. ஆர்.நரேந்திரன், இரண்டாம் வகுப்பு, ஏஞ்சல் மெட்ரிகுலேஷன் பள்ளி, திருநின்றவூர்
1084. மு.சாய்ஸ்ரீ, எட்டாம் வகுப்பு, என்.கே.எம். உயர்நிலைப் பள்ளி, வேலூர்
1085. க.சிவக்குமார், ஒன்றாம் வகுப்பு, ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1086. ஆர்.ராஜசேகரன், ஏழாம் வகுப்பு, மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அரியலூர்
1087. ஆர்.பிரியதர்ஷிணி, பத்தாம் வகுப்பு, மான்போர்ட் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, அரியலூர்
1088. க.தமிழ்ச் செல்வி, நான்காம் வகுப்பு, ஹில்டன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1089. சு.கருப்பணசாமி, எட்டாம் வகுப்பு, ஜி.எஸ்.ஹிண்டு மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீவில்லிபுத்தூர்
1090. க.கார்த்திக் செல்வன், ஒன்பதாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, மலைப்பட்டி
1091. கே.ஏ.சங்கீர்த்தன், இரண்டாம் வகுப்பு, ஜி.கே.டி. மெட்ரிக் உயர்நிலைப் பள்ளி, கோயமுத்தூர்
1092. ராம.மம்தாராம், ஆறாம் வகுப்பு, டால்மியா மேல்நிலைப் பள்ளி, கல்லக்குடி
1093. ம.செந்தில்கண்ணன், இரண்டாம் வகுப்பு, மரியன் சீனியர் செகண்டரி பள்ளி, கோட்டயம்

கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

புகைப்படம்

: ....

வீட்டு முகவரி : ....

....

....

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!



1094. கே.பிரபாகரன், எட்டாம் வகுப்பு, மாநகராட்சி உ.நி. பள்ளி, சென்னை

1095. ஆர்.சிவசங்கரி, எட்டாம் வகுப்பு, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, திருவரங்கம்


1096. மு.அருணாதேவி, எட்டாம் வகுப்பு, முத்தாலம்மன் இந்து உயர்நிலைப் பள்ளி, வடபுதுப்பட்டி

1097. வீ.காவியப்பாவை, நான்காம் வகுப்பு, கலைமகள் வித்யா மந்திர் மெட்ரிக் பள்ளி, கும்மிடிப்பூண்டி

1098. பி.பிருந்தா, ஆறாம் வகுப்பு, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

1099. எஸ்.யோகேஷ், இரண்டாம் வகுப்பு, ஸ்ரீநடேசன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பளளி, மண்ணிவாக்கம்

1100. பி.நவீன்குமார், ஏழாம் வகுப்பு, கன்டோன்மென்ட் போர்டு உயர்நிலைப் பள்ளி, சென்னை



Rx – ன்

இலத்தீன் மொழியில் 'பென்னா' என்றால் 'பறவையின் இறகு' என்று பொருள். அது ஆங்கிலத்தில் 'பென்' என்றும் தமிழில் 'பேனா' என்றும் ஆயிற்று.

முற்காலத்தில் பறவை இறகுகளை, முனையில் சீவி சாயத்தில் தோய்த்து எழுதினர்.

- பா.முகுந்தன், சென்னை

● மிக அதிகமாக மின் சக்தியை வெளிப்படுத்தும் ஈல் மீன்கள் பிரேசில், கொலம்பியா, வெனிசுலா, பெரு ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. இந்த ஈல் மீன்கள் வெளிப்படுத்தும் மின் சக்தியின் அளவு 400 முதல் 650 வோல்ட்டுகள் ஆகும்.

- ம.விவேக், திருநெல்வேலி



அர்த்தம்!!



● மருத்துவர்கள் எழுதும் மருந்துச் சீட்டில் Rx என்று இருக்கும். இதற்கு லத்தீன் மொழியில் RECIP. அதாவது 'எடுத்துக் கொள்' என்று பொருள்.

- தேனிமுருகேசன், தேனி

● 'டேவிட் காப்பர்ஃபீல்டு', 'ஆலிவர் ட்விஸ்ட்!' 'தி டேல் ஆஃப் டு சிட்டீஸ்' போன்ற புகழ்பெற்ற நாவல்களை எழுதிய சார்லஸ் டிக்கன்ஸ், சிறுவயதில் தொழிற்சாலையில் வேலை பார்த்தவர்.

● ஷேக்ஸ்பியர் எழுதிய கடைசி நாடகம் 'தி டெம்பஸ்ட்'.

● 'ஜெய சம்ஹிதா' என்பது மகாபாரதத்துக்கு வழங்கப்படும் வேறு பெயர்களுள் ஒன்று.

● ஏலக்காயின் அறிவியல் பெயர் 'எலிடேரியா கார்டமோம்'.

- அதிபன் அன்புமணி, ஐந்தாம் வகுப்பு, கலைமகள் கல்வி நிலையம் மெட்ரிக் பள்ளி, ஈரோடு

● உலகின் உயரமான கலங்கரை விளக்கம் ஜப்பான் நாட்டிலுள்ள 'யோகஹாமா'வில் உள்ளதாகும். 348 அடி உயரமுள்ள இதன் ஒளி 32 கி.மீ. தூரம் வரை தெரியும்.

● பேப்பரை முதன் முதலில் பயன்படுத்தியவர்கள் எகிப்தியர்கள்தான்.

● முதன் முதலில் எழுதப்பட்ட பொருளாதார நூல் எது தெரியுமா? நம் அர்த்த சாஸ்திரம்தான்.

● தரையில் பதிந்த புலிகளின் கால் சுவடுகளைப் பார்த்துத்தான் எத்தனை புலிகள் வாழ்கின்றன என்று கணக்கு எடுக்கப்படுகிறது.

- ஆர்.பி.இரமணி, மதுரை





நீங்கள்தான்!

உலகப் புகழ் பெற்ற ஓவியர் பிகாசோ. அவர், உலகப் போரின்போது ஜெர்மனியின் சர்வாதிகாரியான ஹிட்லர் செய்த அட்டூழியங்களை ஓவியங்களாக வரைந்திருந்தார். அந்தச் செய்தியை அறிந்தார் ஹிட்லர். அந்த ஓவியங்களை வரவழைத்துப் பார்த்தார். ஹிட்லரின் கொடுமைகளுக்கு அந்த ஓவியங்கள் சாட்சி சொல்வது போல அமைந்திருந்தன. அதனால் மிகவும் ஆத்திரம் அடைந்தார் ஹிட்லர்.



பழக்கம்!

உலகப் புகழ்பெற்ற ஆங்கில நாடகாசிரியர் ஜார்ஜ் பெர்னாட்ஷா. ஒருபுறம் அவரை பலரும் புகழ்ந்தாலும் அந்தப் புகழால் அவர்மீது பொறாமை கொண்டவர்களும் இருந்தார்கள். அந்த நபர்களில் ஒரு முரடனும் இருந்தான். ஒருமுறை பெர்னார்ட்ஷா நடந்து சென்று கொண்டிருந்தார். குறுகலான அந்தப் பாதையின் எதிரிலிருந்து அந்த முரடன் வந்தான். அவன் பெர்னார்ட்ஷாவை திட்ட வேண்டும் என்ற எண்ணத்துடன் வழியை மறைத்து நின்றான். பெர்னார்ட்ஷாவுக்கும் அந்த முரடனைப் பற்றி நன்றாகத் தெரியும். எனவே, அவர் ''தயவு செய்து வழிவிடுங்கள்'' என்று அமைதியாகக் கூறினார். பெர்னாட்ஷாவை அவமானப் படுத்த வேண்டும் என்ற எண்ணத்தோடு வந்தவன், எப்படி அவர் கேட்டதற்கு ஒப்புக் கொள்

அவர் பிகாசோவை அழைத்து, "இதெல்லாம் நீ செய்ததா?" என்று படத்தைக் காட்டிக் கேட்டார். ஹிட்லரின் கோபத்தைப் பார்த்தும் பிகாஸோ நடுங்கவில்லை.

"எல்லாம் தாங்கள் செய்தவைதான். எல்லாமே தங்களுடைய கைவண்ணம்தான்" என்றார் அமைதியாக! ஹிட்லர் வாயடைத்துப் போனார்.

- **ஆர்.பி.இரமணி, மதுரை**

வான்?

அவன் 'நான் முட்டாள்களுக்கு வழி விடும் பழக்கமில்லை' என்றான் கோபமாய். அதைகேட்ட பெர்னார்ட்ஷா கோபப் படவில்லை. "ஆனால் நான் வழி விடுவது உண்டு" என்று அமைதியாக கூறியபடியே அவனுக்கு வழிவிட்டு ஒதுங்கி நின்றார். அந்த முரடன் வெட்கிப் போனான்.

- **பு.இந்துமதி, காஞ்சிபுரம்**



விடாமுயற்சி!

இங்கிலாந்தின் பிரதமராக விளங்கிய வின்சென்ட் சர்ச்சில் மிகச் சிறந்த பேச்சாளர்; கூர்மையான அறிவு படைத்தவர். ஒருமுறை சர்ச்சிலைப் பார்க்க பத்திரிகை நிருபர் ஒருவர் வந்தார். அவரைப் புன்முறுவலுடன் வரவேற்ற சர்ச்சில் "நீங்கள் மிகவும் கொடுத்து வைத்தவர். காலையிலிருந்து என்னைப் பார்க்க வந்த ஒன்பது நிருபர்களை திருப்பி அனுப்பிவிட்டேன். நீங்கள் பத்தாவது ஆள் என்றாலும் என்னைப் பார்க்கக் கொடுத்து வைத்திருக்கிறீர்கள்" என்றார் பெருமையாக.

அதைக் கேட்ட அந்த நிருபரும் சளைக்கவில்லை, "உண்மைதான். காலையிலிருந்து ஒன்பது முறை உங்களைப் பார்க்க அனுமதி கேட்டு மறுக்கப்பட்டதும் நான்தான். அதனால் சலிக்காமல் மீண்டும் கேட்டு பத்தாவது முறை இப்போதாவது பார்க்கக் கொடுத்து வைத்திருக்கிறேன்" என்றார் சிரித்தபடியே! அந்த பதில் எதிர்பாராத போதிலும் சர்ச்சில் அவரது முயற்சியைப் பாராட்டிப் பேட்டியளித்தார்.


- **சு.அபிஷேக், உ. எண் : 518 சென்னை**


வெள்ளை எதிரிகள்!

பகவான் புத்தரின் பல்சுவைக் கதைகள்!

ஆர்.எஸ்.கீதா, பி.ஏ. ஈஸ்வரன், ஸ்ரீ அன்னை மீனாக்ஷி பப்ளிகேஷன்ஸ், தி.நகர், சென்னை - 17 விலை ரூ.50/-

'ஜாதகக் கதைகள்' என்று புத்தர் குறித்த வரலாற்றில் படித்திருக்கிறீர்கள் அல்லவா! அவற்றின் தமிழாக்கம்தான் இந்நூல். புத்தர் வாய்மொழியாகக் கூறிய அவரது முற்பிறவிக் கதைகள் என்று இவை கூறப்படுகின்றன. சித்தார்த்தனாகப் பிறந்து புத்தராக மலர்ந்தவரின் நல் உணர்வூட்டும் சுவையான கதைகள்!







உங்கள் வாழ்க்கைக்கான பொது அறிவுத் தகவல்கள் 301

சாகம்பரிதாசன். ஜெய் ஷங்கர் பப்ளிகேஷன்ஸ், தி.நகர், சென்னை-17. விலை ரூ.60/-

அறிவியல் உண்மைகள், இலக்கிய நிகழ்வுகள், இடங்கள் பற்றிய குறிப்புக்கள், புகழ் மிக்கவர்களின் வாழ்க்கை பற்றிய துளிகள் என தகவல்கள் தொகுக்கப்பட்டுள்ளன. நாம் அன்றாடம் விரும்பிச் சந்திக்கும் இரண்டு வெள்ளை எதிரிகள் யார் தெரியுமா? உப்பும் சர்க்கரையும்தான். ஏன் என்கிற விளக்கமும் நூலில் உள்ளது. இதுபோன்ற பயனுள்ள தகவல்களை வாசித்துப் பயன்பெறலாம்.

இது உங்கள் குழந்தைக்கான ராமாயணம்

ஜயா சந்திரசேகரன், வரம், 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்பேட்டை, சென்னை - 18. விலை ரூ.50/-

இதிகாசமாக விளங்கும் ராமாயணத்தின் எளிய வடிவம் இந்நூல். நேரடியாகக் கதை கேட்கும் அனுபவம் வாசிப்பின்போது கிடைக்கிறது. குழந்தைகளுக்குரிய எளிய மொழியில் கதைச் சுருக்கத்தை அழகுறத் தந்திருக்கிறார் ஆசிரியர். கதை கேட்கும் ஆர்வமுள்ள எல்லோரும் குழந்தைகளே. இது அனைவருக்குமான நூல்.

– நேயமுகில்

முதுகிலே வீடு: கடலிலே வாழ்வு!

கார்த்திகா



முயல் கூட ஓட்டப்பந்தயத்துல ஜெயிச்சது யாரு-ன்னு ஒரு கதை உங்களுக்குத் தெரியும்தானே? சரியா கண்டுபிடிச்சுடுவீங்க. ஆமைதான் அந்தக் கதைல ஜெயிச்சது. அது நில ஆமையோட கதை. இதேபோன்ற வேறு வகையான ஆமைகளும் உள்ளன. அவை பற்றித் தெரிஞ்சுக்கலாமா?

ஆற்றுநீரிலோ, குளத்து நீரிலோ இருக்கும் ஆமைகள் நன்னீர் ஆமைகள். கடலில் வாழும் ஆமைகள் கடலாமைகள்.

கடலாமைகளிலும் (அலுங்கு ஆமை, பஞ்சல் ஆமை, எலி ஆமை, ஓங்கில் ஆமை, பெருந்தலை ஆமை என) ஐந்து வகைகள் உள்ளன.


அலுங்கு ஆமை ஓடு பழுப்பு, செம் பழுப்பு, கறுப்பு, வெளுப்புன்னு, பார்க்க ஏதோ ஓவியம் வரைஞ்ச மாதிரி இருக்கும். இந்த ஓடுகளை வைச்சு மூக்குக் கண்ணாடி சட்டம், நகைப் பெட்டி எல்லாம் செய்யலாம். இதோட ஆங்கிலப் பெயர் என்ன தெரியுமா? ஹாக்ஸ்பில் டர்ட்டில் (Hawksbill Turtle). அறிவியல் பெயர் எரிட்மோசெலிஸ் இம்பிரிகடா (Eritmochelys Imbricata). முட்டையிட்ட இரண்டு மாதங்களில் இந்த ஆமைக் குஞ்சுகள் வெளிவரும். இதுக்கு ரொம்பப் பிடிச்ச உணவு கடற்பஞ்சுதான்.

அடுத்தது பஞ்சல் ஆமை. இது தமிழ் நாட்டுல திருநெல்வேலி மாவட்டத்துல இருக்கிற பஞ்சல்னு ஒரு ஊரில் முட்டையிடுறதனால இந்தப் பெயர் வந்தது. இதுக்கு பங்குனி ஆமைனும் இன்னொரு பெயர் இருக்கு. ஏன்னா பெரும்பாலும் பங்குனி மாதத்தில்தான் குஞ்சு பொரிக்கும். அது மட்டுமில்லை. இந்த ஆமை எங்கே பிறந்ததோ, அந்த இடத்தைத் தேடிவந்து

அங்கேதான் முட்டையிடும். ஆனா பாவம், முட்டையிடும்போது அழுதுக்கிட்டிருக்கும். ஏன் தெரியுமா?

தன் உடம்புல இருக்கற அதிக உப்பை வெளியேற்றவும், அப்புறம் குழி தோண்டும்போது கண்ணில் விழற தூசியை வெளியேற்றவும்தான் இவை அழுகின்றன. ரொம்ப சுவாரஸ்யமா இருக்குது இல்ல?

இன்னொரு ஆச்சரியம் என்ன தெரியுமா? முட்டையிட்ட இடத்தில் வெப்பம் 28 டிகிரி செல்சியஸுக்கு அதிகமா இருந்தா பெண் ஆமையாகவும், குறைவா இருந்தா ஆண் ஆமையாகவும் பிறக்கின்றன. ஐம்பது முதல் அறுபது நாட்களில் முட்டையிலிருந்து வெளிவரும் இந்த ஆமைக் குஞ்சுகளில், பத்து சதவிகிதம்தான் கடல் பரப்பை அடைந்து உயிர் வாழும். மற்ற குஞ்சுகள் சூழ்நிலைக் காரணிகளால் பிறந்த சில மணி நேரங்களில் உயிரிழக்கின்றன. இந்த ஆமையை ஆங்கிலத்தில் ஆலிவ் ரிட்லி(Olive Ridley)னும், அறிவியல் பெயராக லெபிடோசெலிஸ் ஒலிவாசியா (Lepidochelys Olivacea)ன்னும் சொல்றாங்க.



அப்புறம் வர்றது பூனைக்கு ரொம்பப் பிடிச்ச பெயருள்ள ஆமை. கரெக்ட்! எலி ஆமை. இந்த எலி ஆமையோட சிறப்பு என்னன்னா இதற்கு ஓடு கிடையாது. அதற்குப் பதிலா கடினமான தோலும் உறுதியான எலும்பும் இருக்கும். அதனால இதை ஆங்கிலத்தில் லெதர் பேக் டர்ட்டில் (Leatherback Turtle)னு சொல்வாங்க. இதனோட அறிவியல் பெயர் டெர்மோசெலிஸ் கொரியாசியா. (Dermochelys Coriacea) இந்த ஆமைக்குப் பிடிச்ச உணவு என்ன தெரியுமா? 'இழுதுனு' ஒரு வகை மீன்தான்.

அடுத்தது ஓங்கில் ஆமை. ஆங்கிலத்தில் க்ரீன் டர்ட்டில் (Green turtle). ஏன்னா இந்த ஆமையோட ஊன் கொழுப்பு பச்சை நிறத்தில் இருக்கும். இதுக்கு அறிவியல் பெயர் செலோனியா மைதாஸ் (Chelonia Mydas). இந்த ஓங்கில் ஆமைகள் 50 முதல் 70 நாட்களில் குஞ்சு பொரியும்.

கடைசியா வர்றது பெருந்தலை ஆமை. இதோட தலை பெரிசா இருக்கும். ஆங்கிலத்திலேயும் லாகர் ஹெட் டர்ட்டில் (Logger head turtle)னு சொல்றாங்க. அறிவியல் பெயர் கெரட்டா கெரட்டா (Caretta Caretta). 46லிருந்து 80 நாட்களில் வெளிவந்து விடும் இந்த ஆமைக் குஞ்சுகள், வளர்ந்த பிறகு சராசரியாக 135 கிலோ எடை இருக்குமாம். அடேங்கப்பா!

ஆமையெல்லாம் எவ்வளவு நாள் வாழும் தெரியுமா? நில ஆமையா இருந்தா சுமார் முன்னூறு ஆண்டுகள் வாழுமாம். என்ன ஆச்சரியமா இருக்கா? உங்க தாத்தா

பார்த்த ஆமையைக்கூட நீங்க பார்க்க வாய்ப்பிருக்கு.

ஆனா கடலாமைகள் அறுபது ஆண்டுகள்தான் வாழும். மனிதர்களோட சுற்றுச்சூழல் விழிப்புணர்வு இன்மை காரணமாக கடலாமையோட ஆயுட்காலம் குறைகிறது. மனிதர்கள் பயன்படுத்தும் பிளாஸ்டிக் பொருட்கள் மழை போன்ற காரணங்களால் கடலில் கலக்கும்போது இழுதுமீன் என்று நினைத்து அவற்றை ஆமைகள் உண்கின்றன. இரைப்பையில் பிளாஸ்டிக் சிக்கி ஆமைகள் இறந்து விடுகின்றன. ஆமைகளை மட்டுமல்ல; ஆமைகளை உட்கொள்ளும் வேறு பல விலங்குகளையும் இது பாதிக்கிறது.

இறைச்சிக்காகவும், ஓடுகளிலிருந்து ஆடம்பரப் பொருட்கள் செய்வதற்காகவும் கூட ஆமைகள் சாகடிக்கப்படுகின்றன.

IUCN (International Conservation for Nature and Natural Resources) என்னும் அமைப்பு அழிந்து வரும் உயிரினங்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. அதன்படி பஞ்சல் ஆமை குறையத் தொடங்கும் நிலையில் உள்ளது. பெருந்தலை ஆமையும், ஓங்கில் ஆமையும் அழிந்துவரும் உயிரினங்களாகக் கண்டறியப்பட்டுள்ளன. அலுங்கு ஆமையும், எலி ஆமையும் அபாய நிலையை எட்டியுள்ள அழிந்து வரும் உயிரினங்களாக இனம் காணப்பட்டுள்ளன. ●





"என்னதான் சர்க்கரை டப்பாவிலே எறும்பு இருந்தாலும் அதற்கு 'சுகர்' வராது!

- ஏ.ஜி.அப்சானா பர்வீன், உ. எண் : 487, திருச்சி



"ஆசிய கண்டம் இருக்கு. ஆப்பிரிக்கா கண்டம் இருக்கு. எமகண்டம் எங்கு இருக்கு?

- க.இராஜசேகர், திருவண்ணாமலை



"கண் டாக்டருக்கும் கண்டக்டருக்கும் சின்ன வித்தியாசம்தான். அதாவது, கண் டாக்டர் லென்ஸ் வைப்பார். கண்டக்டர் பேலன்ஸ் வைப்பார்."

- ஆர்.கிருத்திகா, உ. எண் : 578, பெண்கள் மேல்நிலைப் பள்ளி, ஸ்ரீரங்கம்

"தூக்க மாத்திரை சாப்பிட்டா தூக்கம் வரும். ஆனால், தலைவலி மாத்திரை சாப்பிட்டால் தலைவலி வருமா?"


- ப.கோபி பச்சமுத்து, கிருஷ்ணகிரி



வரலாறு

"சைக்கிள்ல போனா Cycling அப்படீன்னா, ட்ரெயின்ல போனா Trainingங்கா"

- ஆர்.ப்ரியதர்ஷினி, பூனாம்பாளையம்



"வாழைப்பழம் எவ்வளவுதான் காஸ்ட்லியா இருந்தாலும் 'சீப்'பாத்தான் கிடைக்கும்."

- அதிபன் அன்புமணி, ஈரோடு





"2020ல் உலகம் எப்படி இருக்கும்?"

"உருண்டையாத்தான்!"


"அந்த படம் பயங்கர சண்டை படம்தான். அதுக்காக டிக்கெட் கொடுக்கும் போதே முகத்துல ஒரு குத்து விடறது 'டூ மச்சா' இல்ல?!"



- த.பாரத், உ. எண் : 576, ஏழாம் வகுப்பு, யாகப்பா பள்ளி, தஞ்சாவூர்

'படை'த்தவன்!

"வரலாறு படைக்கிறது எப்படின்னு தெரியுமா? ஹிஸ்டரி புத்தகத்தை சாமி படத்துக்கு முன்னால வச்சு கும்பிடணும்! அவ்ளோதான்!"



- எஸ்.தணிகைவேல், உ. எண் : 762, பெரிய காஞ்சிபுரம்

வாய்ப்புண்


டாக்டர் கு.கணேசன்

குழந்தைகளுக்கு வாய்ப்புண் வருவது மிகவும் சாதாரண விஷயம்தான். ஆனால் அதைக் கவனிக்காமல் அலட்சியப்படுத்தினாலோ அல்லது வாய்ப்புண் அடிக்கடி வந்தாலோ பிரச்னை பெரிதாகிவிடும்.

உள்உதடு, உள்கன்னம், நாக்கு, மேல் அண்ணம் ஆகிய பகுதிகளில் கடுகளவு தோன்றும் கொப்புளங்கள், சில நாட்களில் உடைந்து, உளுந்து அளவுக்குக் குழிப் புண்களாக தொடரும்.

யாருக்கு வரும்?

பொதுவாக வைட்டமின் சத்து குறைந்தவர்களுக்கும், இரைப்பையில் புண் உள்ளவர்களுக்கும், குடல் புழுக்கள் உள்ளவர்களுக்கும் வாய்ப்புண் வருகின்ற வாய்ப்புகள் அதிகம்.



காரணம் என்ன?

நீண்ட நாட்களுக்குச் சரிவிகித உணவு உண்ணாதவர்களுக்கு இரும்புச்சத்து மற்றும் வைட்டமின் பி12 குறைபாடு ஏற்படும். இதனால் இரத்தத்தில் வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். இதன் விளைவாக உடலில் நோய் எதிர்ப்புத்திறன் குறையும். அப்போது வாய்ப்புண் வரும்.

அதிகமாக கவலைப்படுவது, தேர்வு நேரங்களில் மாணவர்களுக்கு மன அழுத்தம் அதிகரிப்பது மற்றும் ஒவ்வாமை ஆகியவற்றாலும் வாய்ப்புண் வரும்!

வைட்டமின் பி2 குறைபாடு இருந்தால் வாயின் ஓரங்களில் வெள்ளை நிறத்தில் புண்கள் தோன்றும். இரைப்பையில் புண் உள்ளோருக்கு அங்கு சுரக்கும் அதீத அமிலம் இரவு நேரங்களில் தூக்கத்தில் உணவுக் குழாயைக் கடந்து வாய்க்கு வந்துவிடும். இதன் விளைவால் தொண்டை மற்றும் வாய்க்குள் புண் ஏற்படும்.

பற்களைக் கவனி!

கூர்மையான பற்கள் இருந்தால் அவை உள் கன்னத்தில் குத்தி புண் உண்டாக்கும். கவனக்குறைவாக உண்ணும்போது கன்னம் கடிபட்டு வாய்ப்புண் ஏற்படலாம். பல் துலக்கும்போது பிரஷ் குத்தி புண் உண்டாகலாம். செயற்கைப் பற்கள் சரியாக பொருந்தவில்லை என்றால் அடிக்கடி வாய்ப்புண் வரும்.

மிகவும் சூடாக காபி குடித்துவிட்டால்கூட வாய்ப்புண் வருவ துண்டு.

கிருமிகள் தாக்கும்!

பாக்டீரியா, வைரஸ் போன்ற கிருமி களின் தாக்குதல் காரணமாகவும் வாய்ப் புண் வருவது வழக்கம்.

'கான்டிடா ஆல்பிகன்ஸ்' எனும் பூஞ்சைக்காளான் கிருமிகளின் பாதிப்பால் நாக்கில் 'கட்டித்தயிர்' போல வெண்படலம் உருவாகி புண் ஏற்படும். அடிக்கடி 'ஆன்டி பயாட்டிக்' மருந்துகளை எடுத்துக் கொள் பவர்களுக்கும் அஜீரணக் கோளாறுகள் உள்ளோருக்கும் இந்தத் தொல்லை நிரந் தரமாகிவிடும்.

பரிசோதனைகள் :

அடிக்கடி வாய்ப்புண் ஏற்பட்டால் இரத்தப்பரி சோதனை, சிறுநீர்ப் பரிசோதனை, மலப்பரிசோதனை போன்றவற்றை மேற் கொண்டு காரணம் அறிந்து சிகிச்சை பெற வேண்டும்.



என்ன சிகிச்சை?

பெரும்பாலான வாய்ப்புண்கள் சிகிச்சை எடுக்கா விட்டால்கூட தானாகவே சரியாகிவிடும். அதாவது சத்தான உணவுகளைச் சாப்பிடும் போது வாய்ப்புண்ணும் சரியாகி விடும். அதே நேரத்தில் வெகு நாட்களுக்கு ஆறாமல் வாயில் புண் இருந்தால் அது புற்றுநோயாக மாறுவதற்கும் வாய்ப்புண்டு.

வருவது ஏன்?

3 வழி!

✱ பால், முட்டை மற்றும் பச்சைக் காய்கறிகளை அதிகமாக சாப்பிட்டால் வைட்டமின் பி2 சத்து கிடைத்துவிடும்.

✱ வைட்டமின் பி12 சத்து தாவர உணவுகளில் மிகவும் குறைவு. அசைவ உணவுகளில்தான் இது அதிகம். ஆகை யால், இந்த சத்தினைப் பெற பால், முட்டை, இறைச்சி, வெள்ளாட்டுக்கறி, ஈரல் போன்றவற்றைச் சாப்பிட வேண்டும்.

✱ இரும்புச்சத்து எல்லா வகைப் பச்சைக் காய்கறிகளிலும் கீரைகளிலும் உள்ளது. தினமும் ஒரு கீரை சாப்பிடுவது நல்லது. பேரீச்சை, வெல்லம், தேன், சோயாபீன்ஸ், கொண்டைக்கடலை, கேழ்வரகு, கோதுமை, பால், முட்டை, பருப்பு வகைகள், இறைச்சி, ஈரல் ஆகிய வற்றிலும் இரும்புச்சத்து மிகுந்துள்ளது. இந்த உணவுகளில் ஒன்று மாற்றி ஒன்றை தினமும் சாப்பிட்டு வந்தால் சத்துக்குறைவு காரணமாக வரும் வாய்ப்புண்ணை நிச்சயம் தவிர்க்கலாம்.

நுண்ணுயிர்க்கொல்லி மருந்து கலந்த களிம்புகளும், வாய் கொப்பளிக்கும் திரவ மருந்துகளும் வாய்ப்புண்ணை விரவில் குணப்படுத்தும். வலி மரத்துப் போகச் செய்யும் களிம்புகளையும் திரவங்களையும் வாய்ப்புண்ணில் தடவலாம். இவற்றோடு வலி நிவாரணி மாத்திரைகளை ஒரு வாரம் சாப்பிட வேண்டும். 'லேக்டோபேசில்லஸ்' மருந்து கலந்த வைட்டமின் பி-காம்ப்ளக்ஸ் மாத்திரகளை ஒரு மாதம் சாப்பிட வேண்டும். அப்போதுதான் வாய்ப்புண் மீண்டும் வராது.

தடுப்பது எப்படி?

அடிக்கடி வாய்ப்புண் வருபவர்கள் பல் மருத்துவரை அவசியம் சந்தித்து ஆலோசனை பெற வேண்டும். கூறான பற்கள் இருந்தால் அவற்றைச் சரி செய்ய வேண்டும்.

வாய்ச்சுத்தம் காத்தால் வாய்ப்புண் வருவதை நிச்சயம் தடுக்கலாம். ஆறு மாதங்களுக்கு ஒருமுறை பல் மருத்துவரிடம் காண்பித்து பற்களை 'ஸ்கேலிங்' முறையில் சுத்தப்படுத்திக் கொள்ள வேண்டும். உணவு மற்றும் மருந்து ஒவ்வாமை இருந்தால் அது எந்த உணவு, என்ன மருந்து என்பதைத் தெரிந்து கொண்டு அவற்றைத் தவிர்க்க வேண்டும். குடல்புழுவை ஒழிக்கும் மாத்திரையை மூன்று மாதங்களுக்கு ஒரு முறை சாப்பிடலாம்.

இது முக்கியம் : சளி, இருமல் போன்றவற்றுக்கு அடிக்கடி 'ஆன்டிபயாட்டிக்' மாத்திரைகளைச் சாப்பிடுபவர்கள் அந்த மருந்துகளோடு 'லேக்டோபேசில்லஸ்' மருந்து கலந்த வைட்டமின் பி-காம்ப்ளக்ஸ் மாத்திரைகளையும் சேர்த்துச் சாப்பிட வேண்டும்.

வின்னர்ஸ்



விடையைச் சொல்; பரிசை வெல் - 22ல் கலந்துகொண்டு சரியான விடைகளை நூற்றுக் கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் : 1) பட்ரி காலஜி, 2) வாக்ரிமல், 3)17 தசைகள், 4.கோன்கு, 5.பாறை

பரிசு பெறுவோர் :

1. ஐ.ரா. சங்கரேஸ்வரி, திருநெல்வேலி
2. டி.சக்திவேல், பழனி
3. எஸ்.மயில்வாகனன், நாமக்கல்
4. க.மணிகண்டன், நம்பியூர்
5. பா.ஜெகதீசன், நீடாமங்கலம்
6. நா.முத்துக்குமார், கரூர்
7. என்.இர்ஃபான், தூத்துக்குடி
8. எஸ்.மருதநாதன், திருவாரூர்
9. டி.பௌலின் மோனிக்கா, திருச்சி
10. சி.அர்ஜுன், சிதம்பரம்

பரிசு பெற்றவர்களுக்கு வாழ்த்துகள்! கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றி!

'ஊ... லலலா' என்று பாடியபடியே உற்சாகமாக வந்து கொண்டிருந்தது காட்டெருமை. அந்த காலைப் பொழுதின் இளஞ்சூடும், பறவைகளின் ஒலியும், காட்டில் தென்பட்ட செழிப்பும் அதன் உற்சாகத்தை அதிகப்படுத்தின.

அப்பொழுதுதான் அந்தக் குரல் கேட்டது.

"ஐயையோ... யாராவது என்னைக் காப்பாற்றுங்களேன்..."

மிகவும் தீனமாக ஒலித்தது அந்தக் குரல்!

குரல் வந்த திசையை நோக்கி ஓடிய காட்டெருமை, அங்கு மரக்கிளையில் சிக்கிக் கொண்டிருந்த ஒட்டகச் சிவிங்கி ஒயிலியைக் கண்டது.

"ஏய்... என்ன ஆச்சு! ஏன் அலறினாய்?"

காட்டெருமை கேட்டவுடன் கண்ணீருடன் பேச ஆரம்பித்தது ஒட்டகச்சிவிங்கி.

"என்னுடைய கழுத்து மிக நீளமாக அசிங்கமாய் இருக்கிறது. குதிரை மாதிரி அழகான கழுத்து வேண்டும் என்பதற்காக, மரக்கிளையில் தலையை வளைத்தேன். சிக்கிக் கொண்டு விட்டேன்."

அதைக் கேட்டதும் காட்டெருமைக்கு கோபம் வந்தது.

"என்ன நினைப்பு இது? பசுவைப் போல ஆக வேண்டும் என எனக்கும் ஆசைதான். அதற்காக கொம்பை உடைத்துக் கொண்டால் அப்படி ஆகிவிட முடியுமா? என்ன பிதற்றல் இது?" என்று கோபித்த காட்டெருமை, மரத்தை வேகமாக மோதியது. அந்த மோதலால் மரத்தின் கிளைகள் அசைந்தன. ஒயிலியின் கழுத்தும் விடுபட்டது.


"நன்றி நண்பா, சமயத்தில் வந்து என்னுயிரைக் காத்தாய்" என்றது ஒயிலி.

"எனக்கு நன்றி வேண்டாம். அதைவிட, உன்னுடைய தோற்றத்தைப் பற்றி குறைபடாமல் இரு. அதற்குப் பதிலாக உன்னுடைய கால்களின் வலிமையைக் குறித்து சந்தோஷப்படு. நிறைகளைப் பற்றிய நினைவுகள், உன்னை வலிமைப்படுத்தும். குறைகளைப் பற்றியே நினைத்தால், மேலும் பலவீனம் ஏற்படும்."

காட்டெருமையின் சொற்கள் கணீரென்று ஒலித்தன. 'சரி' என்பதுபோல தலையசைத்து நகர்ந்தது ஒயிலி.

- ஜனனீஷ்வர், சென்னை - 41





வாழை போல்

தன்னைத்தானே உலகிற்கே
தியாகம் செய்யும் வாழையினை
நன்னகம் ஏற்றிப் போற்றிடுவோம்
நம்மைத் தியாகியாய் ஏற்றிடவே!

வாழைப் பூவே வடையாகும்
வாழைக் காயோ உணவாகும்
வாழைப் பழமோ சுவையாகும்
வாழைத் தண்டோ நோய் தீர்க்கும்!

இலையில் உணவே படைத்துண்போம்
இசைந்த வாழைப் பட்டையிலே
வழியும் சாறும் தீப்புண்ணின்
கொடுமை ஆற்றும்
மருந்தாகும்!

ரா. கலைச்செல்வி.
உ.எண்.188,
சென்னை

வாழ்வோம்!

தண்டும் சோற்றில் விருந்தாகும்
காய்ந்த நாறும் மலர்கட்டும்
தண்டின் அடியில் முளைவிட்டே
தனக்கே கன்றுகள் ஈன்றுவிடும்!

முத்தமிழ் தன்னில் ஒருதமிழாய்
முப்பழம் தன்னில் திருப்பழமாய்
தித்திக் கும்தமிழ் செயலாக்கம்
எத்திக் கும்சுவைப் புயலாக்கம்


உன்னை நீயே வாழையதாய்
உயர்ந்த கொள்கைத் துடிப்புடனே
தன்னை ஈந்தே நீவாழ்ந்தால்
தாரணித் தலைவன் நீயேதான்!



தங்கத் தட்டு!

கதை : ராகுல்
படம் : சொக்கலிங்கம்

குழந்தைக் கடவுள்கள் -9





கூட்டம் கூடியது...
திருட வந்தவன் தட்டை மட்டுமா கொண்டு போவான்...
இதில் ஏதோ சூது இருக்கிறது.
அர்ச்சகர் நடுங்கி...
நம்புங்கள்... நான் தவறு செய்ய வில்லை...
கூட்டத்திலிருந்து...
அது குரு நமசிவாயரிடம் இருக்கிறது...
ஒரு சிறுவன் ஆவேச நிலையில்...
பொய்; அவர் இங் கில்லை
நான் சொல்வது உண்மை; அவர் சிதம்பரம் சென்று கொண்டிருக்கிறார்.


அவரைப் போய் பாருங்கள்; உண்மை புரியும்
நிஜமாகவா?
சிறுவன் ஆவேசமாய்...
தங்கத் தட்டை தருவார்... போங்கள்!
நமச்சிவாயரை சந்தித்தது கூட்டம்...!
விலையற்ற தங்கம் என் தாய். அவளை விட்டுவிட்டு...
... விலை போகும் தங்கத் தைத் தேடி வந் திருக்கிறீர்கள்.
இதோ, நீங்கள் தேடிய தட்டு!
நீங்கள் பெரிய மகான்!
இல்லை; உண்ணாமலைத் தாயின் மகன்!
அனைவரும் வணங்கினர்.

மழை பொழிதலை யார் யார் அவரவர் தொழிலுக்கேற்ப, எவை எவை அவற்றின் இயல்புக்கேற்ப எப்படி சொல்வார்கள் என்கிற பட்டியல் வியப்பினை ஏற் படுத்தியது.

- ச.ஆ.கேசவன், இனாம்மணியாச்சி

'அறிவியல் கதைகள்' பகுதியில் 'டை ஹைட்ரஜன் மோனாக்ஸைட்' பற்றி தீவிரமாக யோசித்தேன். கடைசியில் அது சாதாரண தண்ணீர் என்றபோது, நான் தீவிரமாக யோசித்ததை எண்ணி சிரிப்பை அடக்க முடியவில்லை.

- மு.அருண்குமார்,
உ. எண் : 670,
ஓசூர்

விடுமுறை என்பது காலைக் கையை நீட்டி ஹாயாக ஓய் வெடுப்பதல்ல; பய னுள்ள பற்பல செயல் களைப் பயின்று நிறைவு பெறவே என் பதை, விடுமுறையைச் சேமிப்போம் என்ற தலையங்கம் தெளிவுபடுத்தியது.

- ஆதிகேசவன், தூத்துக்குடி

சிறுவயதிலேயே நற்பண்புகளை வளரச் செய்கிறது கோகுலம்! அதற்காக கோகுலத்துக்கு அன்பான பாராட்டுகள்.

- ஆ.பிரேம்குமார்,
உ. எண் : 422, காப்புக்காடு

தலைவர்களின் வாழ்வில் நடந்த சம்பவங்களை வழங்கிய விதம் அருமை. நம் நாட்டுத் தலைவர்களைப் பற்றி இது மாதிரி ரத்தினச் சுருக்கமாக தரும்போது, படிக்கும் நம் மனத்தில் அவை பசுமரத் தாணி போலப் பதிந்து விடும் என்பது திண்ணம்.

- த.மௌரியா, உ. எண் : 939,
கோவை



கதைகள், புதிர்கள், ஸ்கூல் கலாட்டா, டாக்டர் பக்கம், படக்கதை என பக்கத் திற்குப் பக்கம் அற்புதம்.

- சு.அருண்பிரசாத், திண்டுக்கல்

அவனியின் கண்கள் என்னும் கதைப் பாடலில் வரும் கருத்து நன்மையை விளைவிக்கும். 'ஆல்ஃபபெட் அரட்டை' மிக மிக அருமை.

- ந.பிருந்தா, ஆறாம் வகுப்பு,
ராஜ் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்
பள்ளி, மயிலாடுதுறை

விடையைச் சொல்; பரிசை வெல் - 24

1. பசிபிக் பெருங்கடலுக்கு பெயர் சூட்டியவர் ____________

2. மின்மினிப் பூச்சி ஒளிரக் காரணமான வேதிப் பொருள் ____________

3. 'ஆலிவர் ட்விஸ்ட்' என்ற நாவலை எழுதியவர் ____________

4. 'பிராண்ஹுரா' மீன் காணப்படும் நாடு ____________

5. ஹிட்லரின் கொடுமைகளை படமாக வரைந்தவர் ____________

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பரிசு ரூபாய் 1000/-

முடிவு தேதி : 15.6.2009



அனுப்ப வேண்டிய முகவரி:

ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காட்டுதாங்கல்,
சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1076


1077


1078


1079


1080


1081


1082


1083


1084


1085


1086


1087


1088


1089


1090


1091


1092


1093


1094


1095


1096


1097


1098


1099


1100

பெயர் மற்றும் விவரங்கள் 57 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24288/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

